Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசியதினசரி National Tamil Daily

மலர் 8 (29 6-66) இதழ் 142

பராபவ ஆனி 15 ரபி அவ் 9 புதன்கிழமை

**மகா ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ் &இன்டஸ்ரியல் என்ஜினியரிங் வேக்ஸ்**

**திறப்பு விழா**

மேற்படி ஸ்தாபனம் இன்று 29-6-66 புதன்கிழமை மாலை 5-00 மணியள வில் யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஜி ஜி. பொன்னம் பலம் Q C. அவர்களால் திறந்து வைக்கப்பெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஸ்ரான்லி ரேட், யாழ்ப்பாணம்.

## இராணுவ புரட்சி

புவனர்ஸ்அயர்ஸ், ஜூன் 28

அர்ஜன்டீனாவில் இராணுவப் புரட்சி ஏற்பட்டிருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன. அங்குள்ள வானொலி நிலையத்தை புரட்சித்துருப்புகள் கைப்பற்றிவிட்டனர் என்றும் சகல தொடர்புகளும் துண்டிக்கப்பட்டுவிட்டன என்றும் அறிவிக்கப்படுகிறது. இராணுவ தளபதி பதவி நீக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து இங்கு நிலைமை மோசமாகியிருக்கிறதாம்.

# ஜி. ஜி. மீண்டும் ஐ. நா. செல்வாரா?

## "பிரதமர் கேட்கிறார் நான் முடிவு செய்யவில்லை"

## மாவட்டசபை மசோதாவையும் ஜி. ஜி. எதிர்க்க மாட்டார்

திருகோணமலை, செவ்வாய்

"ஐக்கியநாடுகளின் சபையின் அடுத்த பொதுக்கூட்டத்திற்குச் செல்லும் இலங்கைத் தூதுக்கோஷ்டிக்கு என்னையே தலைமைதாங்கிச்செல்லும்படி பிரதமர் டட்லி கேட்டுள்ளார். நான் இந்த அழைப்பை ஏற்பதா? இல்லையா என்பதைப் பற்றி இன்னும் முடிவுசெய்யவில்லை. ஐக்கியநாடுகள் சபையின் புதிய சட்டத்திற்கு தலைவராகும் வாய்ப்பு இம்முறை இலங்கையைச் சேர்ந்தவருக்கு கிடைக்கவிருக்கின்றது."

இவ்வாறு அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் திருகோணமலை இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேசுகையில் கூறினர். தமிழ்க்காங்கிரஸ் வாலிபமுன்னணித் திருமலை கிளைத் தலைவர்களில் ஒருவரான திரு. பா, விஜயநாதன் இக் கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்தார்.

பல்கலைக்கழகம் மாவட்டசபை

திரு. ஜி ஜி. பொன்னம்பலம் மேலும்கூறியதாவது:



இன்று தமிழ் மக்களுக்கு தேவை இந்துப் பல்கலைக் கழகமேதவிர தமிழ்ப் பல்கலைக்கழகமல்ல. இந்துப் பல்கலைக் கழகத்தை நான் வேண்டுமென்று சொல்வதால் நான் தமிழ்ப் பல்கலைக்கழகத்தை எதிர்ப்பவனென்று கருத வேண்டாம். இந்துப்பல்கலைக்கழகம் ஒன்று பெறுவதற்காக நான் உயிருள்ள வரை போராடுவேன்.

மாவட்டசபைகள் நிறுவ வேண்டுமென்று கோருவதன்மூலம் தமிழரசார் தமிழ்மக்களை இரு மாகாணங்களுக்குள் அடக்கிவைக்கப்பார்க்கின்றார்கள். மாவட்டசபைகள் தமிழினத்திற்கு என்றும்நன்மை தரா) இதை நான் வலியுறுத்திக்கூறினாலும் அவர்கள் கேட்கப்போவதில்லை. மாவட்டசபைகள் மசோதாவை நான் எதிர்க்கப் போவதில்லை. மாவட்டசபைகளினால் தமிழ் மக்களுக்கு என்ன கிடைக்கும் என்பதை அம் மசோதா வந்தபின்னர் உணர்ந்து பார்க்கட்டும். நான் ஏன் மந்திரிப் பதவி ஏற்கவில்லை யென சிலர் கேட்கின்றனர் எனக்கு இரு மந்திரிப் பதவிகள் தரப்பட்டபொழுது அவை மூலம் தமிழ் மக்களுக்கு எதுவித நன்மையும் செய்யமுடியாதென்பதால் நான் மந்திரிப் பதவியை ஏற்கவில்லை.

## மோசடி செய்ய முயற்சித்தவருக்கு ரூ. 40,000 அபராதம்!

யாழ்ப்பாணம், சனி

அரசாங்க சுங்க இலாகா உத்தியோகத்தர்களை ஏமாற்ற முயன்றதாக சந்தேகிக்கப்பட்ட ஒருவருக்கு விசாரணையின்பின் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு.வேர்ணன் அபயசேகரா 40,000 ரூபா அபராதம் விதித்தார்.

சுங்க இலாகாவினரிடமிருந்த 30,000 ரூபா பெறுமதியான ஜவுளி தனக்குச் சொந்தமானது என்பதற்கு அத்தாட்சிப்படுத்த வல்வெட்டிததுறையைச் சேர்ந்த கதிர்காமர் என்பவர் பொய்யான பற்றுச் சீட்டு ஒன்றை சமர்ப்பித்தாராம். உடுப்பிட்டியிலுள்ள ஏ. சுந்தரவடிவேல் என்பவர் வீட்டிலிருந்து 30,000 ரூபா பெறுமதியான ஜவுளியை சுங்க இலாகாவினர் கைப்பற்றியிருந்தனர். குறிப்பிட்ட ஜவுளி வகைகள்தனக்குச் சொந்தமானதெனக்கோரி, அதற்கு அத்தாட்சியாக பற்றுச்சீட்டு ஒன்றை இவர் சுங்க இலாகாவினரிடம் சமர்ப்பித்தார். குறிப்பிட்ட பற்றுச்சீட்டுப் பொய்யானதென கண்டுபிடிக்கப்பட்டதன் பெயரில் அரசாங்க அதிபர் இது குறித்து விசாரணை நடத்தி மோசடி செய்ய முயற்சித்ததாக 40,000ரூபா அபராதம் விதித்தார். (ந. நி.)

வட வியட்னாமில்

## எரிபொருள் சேகரிப்பு நிலையம் மீது விமானகுண்டு வீச்சு

### 150 மைல் தூரத்துக்கு தீச்சுவாலை தெரிந்தது!

சைகோன், ஜூன் 28

வடக்கு வியட்னாமிலுள்ள எரிபொருள் சேகரிப்புநிலையமொன்றின்மீது அமெரிக்க விமானங்கள் நேற்று குண்டு மாரி பொழிந்ததில் தீச்சுவாலைகள் விண்ணைத் தொடுமளவிற்கு கொழுந்துவிட்டெரிந்தது.

தீச்சுவாலைகள் சுமார் நூற்றிஐம்பது மைல் தூரத்துக்குத்தெரிந்ததாகக் கூறப்பட்டது.

வடக்கு வியட்னாமில் எண்ணெய், எரிபொருள் கிடங்குகள்மீது அமெரிக்க விமானங்கள் தாக்குதல்கள் நடத்தாது என்று அமெரிக்காவில் தெரிவிக்கப்பட்ட சிலமணி நேரத்துக்குள்ளாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப் படுகிறது.

## பம்பாய் ரயில் விபத்து: 32 பேர் காயம்

பம்பாய், ஜூன் 28

பம்பாய்க்கு அருகே இன்று காலையில் இரண்டு ரயில்கள் மோதிக்கொண்டதில் 32 பேர் காயமடைந்தனர். இவர்களில் 10 பேர் படுகாய மடைந்திருக்கின்றனர் என்றும், ஒரு சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருக்கிறதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு ரயில் நிலையத்தில் நின்றுகொண்டிருந்த ரயிலுடன் சரக்குவண்டி ஒன்று மோதிக்கொண்டதில் இவ் விபத்து நிகழ்ந்தது.

காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கும் ஒவ்வொருவருக்கும்300 ருபா வீதம் நிதிஉதவிவழங்கப்படும்,

## வலப்பன எம். பி. ஹேரத் ஸ்தானமிழந்தார்

கொழும்பு, செவ்

வலப்பன தொகுதியின் பிரதிநிதியாக திரு ரி பி. எம். ஹேரத் (சுதந்திரக் கட்சி) ஜனப்பிரதிநிதிகள் சபைக்குத் தெரிவுசெய்யப்பட்ட தேர்தல் செல்லுபடியாகாதென இன்று நீதியரசர் ஏ சி. அலெஸ் தீர்ப்பளித்தார்.

திரு. ஹேரத் வலப்பனத் தொகுதிக்குத் தெரிவுசெய்யப்பட்டதை ஆட்சேபித்து மனு தாக்கல்செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் சாட்சியமளித்த மூன்று சாட்சியங்களையும் அவர்கள் முறைகேடான செயல்களில் ஈடுபட்டார்கள் என்பதற்காக ஏன் அவர்களைப் பற்றிக் கவர்னர் ஜெனரலுக்கு அறிவிக்கக்கூடாது என்பதற்குக் காரணம் காட்டுமாறும் நீதியரசர் உத்தரவிட்டார்.

## இளைஞருக்கு வேலைவாய்ப்பு திட்டம்

களுத்துறை, செவ்வாய்

"வேலை தேடி அலையும் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் வகையில் தேசியஅரசாங்கம் புதிய திட்டமொன்றைத் தயாரித்துவருகிறது. இத் திட்டம் ஊக்கமுள்ள இளைஞர்களுக்கு நல்ல பலனளிக்கும்" என்று காணிநீர்ப்பாசனமந்திரி திரு. சி.பி.டி' சில்வா இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் உரை நிகழ்த்துகையில் கூறினர்.

"கடந்தகாலத்தில் திருமணம்செல்தவர்கள் மட்டுமே குடியேற்றத்திட்டங்களில் அமர்த்தப்பட்டு அவர்களுக்கு மட்டுமே காணி வழங்கப்பட்டது. ஆனால் இன்றைய அரசாங்கம், இளைஞர்களின் சேவையைக் கொண்டு நாட்டை வளம்படுத்த திட்டமிட்டிருக்கிறது. ஒவ்வொரு இளைஞருக்கும் இரண்டு ஏக்கர் காணி விதம் கொடுக்கப்படும் என்றும் திரு. சி. பி. டி' சில்வா கூறினர்.

கென்யா தேர்தல்

## ஆளும் கட்சி வெற்றி

நைரோபி, ஜூன் 28

கென்யா தேர்தலில் ஆட்யிலிருக்கும் ஆபிரிக்க தேசிய யூனியன் மகத்தான வெற்றி பெற்றிருக்கிறது. மொத்தமாகவுள்ள 30 தொகுதிகளில் ஆளும் கட்சி 21 தொகுதிகளிலும் முன்னாள் உப அதிபர் ஒடிங்கா தலைமையிலான எதிர்க்கட்சி ஒன்பது ஸ்தானங்களிலும் வெற்றி பெற்றுள்ளது.

தேர்தலில் முடிவுகள் சந்தேகத்துக்கிடமாக விருக்கிறதென்றும் இதனைத்தாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் எதிர்க்கட்சியினர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

## அணுகுண்டு அச்சம்

லண்டன், ஜூன் 28

தென் பசுபிக்கில் சில தினங்களில் பிரான்ஸ் அணு ஆயுதப் பரீட்சை நடத்துவதையிட்டு பசுபிக் தீவுகளில் வாழ்பவர்கள் பெரும் அச்சம் கொண்டுள்ளனர்.

## மாஸ்கோ பயணம்

புதுடில்லி, ஜூன் 28

இந்திய திட்ட மந்திரிதிரு, அசோக்மேத்தா இன்று பகல் மாஸ்கோவுக்குப் பயணமானர்.

## சூ-என்-லாய் பாக. விஜயம்

ராவல்பிண்டி, ஜூன் 28

அல்பேனியாவிலிருந்து பாகிஸ்தானுக்கு விஜயம் செய்த சீனப் பிரதமர் திரு. சூ-என்-லாய்க்கு இன்றுசிறப்பானதொரு வரவேற்பு அளிக்கப்பட்டது.

திரு. சூ-என்-லாய் இங்கு இரண்டு தினங்கள் தங்கியிருப்பார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நெசவுத் தறிகள்

9 நெசவுத் தறிகள் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: லெட்சுமி மரக்காலே, ஊர்காவற்றுறை, ஏ. பசுபதி. 596

கார்

33 Sri 4911 15 அந்தர் மொறிஸ் (Morris) வான் நல்ல நிலைமையில் விற்பனைக்குண்டு. வானை நேரில் பார்வையிடலாம். M. T. செல்லையா, பிறவுண்ரோட், யாழ்ப்பாணம். தொலைபேசி இல: 680.. 702

வீடு

426/1 நாவலர்வீதி யாழ்ப்பாணம், 5 பரப்புக் காணியும், குழாய்நீர், மின்சாரம், வடிகால் வசதிகள் அடங்கியதும் பாடசாலைகள், ஆலயங்கள் சமீபத்திலுள்ளதுமான வீடு. சபாரத்தினம், 32, றக்கா ஒழுங்கை, சுண்டிக்குளி. தொலைபேசி இல: 7164. அவர்களுக்கு விண்ணப்பிக்கவும். 703

### தேவை

நெசவாளர்கள்

வித்தகா நெசவு நிலையத்தில் வேலை பார்ப்பதற்கு அனுபவமுள்ள நெசவாளர் தேவை. வெளியூர் பிள்ளைகளுக்கு தங்குவதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்படும். கீழ்க்காணும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும். வித்தகா நிலையம், தமிழகம், கோப்பாய். 708

### வாடகைக்கு

வீடு

தாவடி, மானிப்பாய் பஸ் செல்லும்பாதையில், தாவடி சந்தியிலிருந்து 1/4 மைல் தூரத்தில் நவீன வசதிகளுடன் வீடு வாடகைக்குண்டு. விபரங்கட்கு: P. துரைராஜா 5, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 705

### கல்வி

வகுப்புகள்

பி. ஏ., ஜீ. ஏ. கியூ., ஜீ சீ ஈ உயர் சாதாரணதரம் கலை/விஞ்ஞானம், வர்த்தகம், தமிழ்/ஆங்கிலம், சிங்களம் ஆகிய வகுப்புகளுக்கு விண்ணப்பங்கள் ஏற்கப்படுகின்றன. துரித பயிற்சிக்கு உடன் சேருங்கள்: யாழ்ப்பாண டியூட்டோறியல் கல்லூரி கைலாசப் பிள்ளையார் கோவிலடி, நல்லூர்-யாழ்ப்பாணம். வதிரி-கரவெட்டி 707


**REGAL—JAFFNA**
NOW SHOWING
Margaret Rutherford
in
**MURDER MOST FOUL**



**நியூ காலிங்கன்**
(இணுவில்)
தினசரி 6 30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எம்.ஜி.ஆர். - சரோஜாதேவி
நடித்த
**தாய் சொல்லை தட்டாதே**



**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போயா தினங்களில் 4 காட்சிகள்
ஆனந்தன் - ராஜஸ்ரீ
நடித்த
**செங்கமலத் தீவு**


## கி. மு. ச. கட்டட திறப்பு விழா

பளை, செவ்வாய்

செம்பியன்பற்று வடக்கு கிராம முன்னேற்ற சங்க கட்டடத்தை காரியாதிகாரி திரு. வி. கந்தப்பிள்ளை திறந்துவைத்துப் பேசுகையில், பொதுமக்கள் கைத்தொழில் அபிவிருத்தி செய்வதில் ஈடுபடவேண்டுமென்றும் அதற்காக உழைக்கவேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

திருவாளர்கள் எஸ் பி. லூப்பையயா, எஸ். சேதுநாயகம், எஸ். செபமாலை. உட்பட பலர் பேசினுர்கள்.


**இன்று முதல்**
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) விஜிதா (ஹட்டன்)
பி. ப. 2, 6, 9-30 மணி
ஆடலழகி **ஜெயலலிதா,**
புதுமுகம் **ஸ்ரீகாந்த்**
நிர்மலா, மூர்த்தி, ஆஷா
மற்றும் பலர் நடித்த
சித்திராலயா அளிக்கும்
ஸ்ரீதரின்
**“வெண்ணிற ஆடை”**
(ஈஸ்ட்மன் கலர்)
இசை:—விஸ்வநாதன், ராமமூர்த்தி
கதை, வசனம், டைரக்ஷன்
ஸ்ரீதர்


## புதிய உத்தியோகஸ்தர்கள்

வல்வெட்டித்துறை, செவ்

பருத்தித்துறை பாராளுமன்ற தொகுதி தமிழரசு மாவட்டசபை அங்குரார்ப்பணக் கூட்டம் திரு. கே. துரைரத்தினம் எம். பி, தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் புதுவட உத்தியோகஸ்தராகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ஏ. சபாரத்தினம், உபதலைவர்கள்: திருவாளர்கள் வி வி இராமசாமிப்பிள்ளை, ரி. இராமநாதபிள்ளை. காரியதரிசி திரு கே. கிருஷ்ணமூர்த்தி, இணைக்காரியதரிசி: திரு கே. இராமச்சந்திரன், தனாதிகாரி: திரு. என். திருஞானசம்பந்தர், திரு. ச. பற்றிக் பெர்னுண்டோ.

மற்றும் செயற்குழு அங்கத்தவர்களாக 18 பேர் தெரிவுசெய்யப்பட்டனர்.

## ம. பொ. சி. . . .

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கங்கள் கைகூடுவதற்கான பணியில் ம. பொ. சி. ஈடுபடுவாரென்று நம்புகிறேன்'' என்று ராஜாஜி கூறினூர்

மணிவிழா சிறப்பு மலரை மதுரைத் தொழிலதிபர் திரு கருமுத்து தியாகராஜ செட்டியார் வெளியிட்டு எதிர்க்கட்சியைப் பலப்படுத்துமாறு கிராமணியைக் கேட்டுக்கொண்டார்.

சட்டசபை தி.மு.க.கட்சி உப தலைவர் திரு. எம் கருணாநிதி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு எதிர்க்கட்சிகளுக்கு ம. பொ. சி. உதவவேண்டுமென்றூர்.

'கலைமகள்' ஆசிரியபர் திரு கி வா ஜகந்நாதன் அரசியலும் தமிழ் இலக்கியமும் ம பொ சி உதவவேண்டுமென்றூர்.

### அண்ணாதுரை

தி மு க தலைவர் திரு. ஸி. என். அண்ணாதுரை பேசியதன் கருத்துபின் வருமாறு:-

இந்தியாவிலேயே தமிழகத்தில் மட்டுமே அரசியல் விழிப்பைக் காண்கிறேன், அரசியலில்மனத்தெளிவுமட்டும் இருக்குமானுல், எந்தப் பிரச்னைக்கும் காலதாமதமின்றித் தீர்வுகாண இயலும்,

சென்னையில் மட்டும்தான் அரசியல்கட்சித் தலைவர்கள் பொதுமக்களை அணுகுவதில் சளைப்பதில்லை. மக்களும் அன்றாடப் பிரச்னைகளை அலசிப்பார்ப்பதில் அக்கறை உள்ளவர்களாக இருக்கிறூர்கள். நாட்டின் இப்பகுதியில் ஜனநாயகத்துக்கு நல்ல எதிர்காலம் அமைந்துள்ளதென்பதற்கு இவையெல்லாம் அறிகுறிகளாகும். நான் 30 ஆண்டுகளாக ஸ்ரீ கிராமணியாருடன் நட்புப் பூண்டு பழகிவருகிறேன். அவரிடம் பொறுந்தன்மையைக் கண்ணுற்றேன். அவர் நாணயமான அரசியல்வாதியெனத் தேர்ந்தேன்.

திரு ம பொ சி தமக்கு வாழ்த்துரை வழங்கிய பெரியார்களுக்கும் புகழுரை நல்கிய தலைவர்களுக்கும் நன்றி பாராட்டிவிட்டு ராஜ்யங்களுக்கு அதிகாரங்கள் இன்னும் அதிகமாக வழங்கப்படவேண்டுமென்றூர். கல்லூரிக்கல்வியில் தமிழுக்குரிய முக்கிய ஸ்தானம் கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்தினூர்.

தலைவர் திரு தெ பொ மீனுட்சிசுந்தரம்பிள்ளை பேசுகையில் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்காகதிரு, ம பொ. சி. செய்துள்ள தொண்டு மகத்தானதென்றூர்.

கம்யூனிஸ்ட் பிரமுகர் திரு மணலி கந்தசாமி, திருமதி சௌந்தரம் கைலாசம் ஆகியோரும் பேசினர்.

40, 000 ரூபா கொண்ட [illegible] பளிக்கப்பட்டது,

## தேர் வெள்ளோட்டவிழா

சங்கானை, செவ்வாய்

நந்தாவில் மனோன்மணி அம்பாள் வெள்ளோட்ட விழா நேற்றுக்காலை நடைபெற்றது. மேற்படி விழா காணி நீர்ப்பாசன நிரந்தரக் காரியதரிசி திரு. ஸ்ரீகாந்தா தலைமையில் நடைபெற்றபோது அவர் தமது தலைமையுரையில் தேர்செய்த உள்நாட்டுக் கலைஞர்களின் திறனை வெகுவாகப் பாராட்டினூர்.

இளைப்பாறிய நீதிபதி திரு. தனபாலசிங்கமும், கொக்குவில் கிராமசபைத் தலைவர் அருளம்பலமும் உரைநிகழ்த்திஞர்கள்.

## விளையாட்டுவிழா

கரவெட்டி, புதன்

கரவெட்டி தேவரையாளி இந்துக்கல்லூரி வருடாந்த விளையாட்டுவிழா இன்று நடைபெறுகின்றது.

வதிரி சிவியான் மைதானத்தில் நடைபெறவிருக்கும் இவ் விளையாட்டு விழாவுக்கு பிரதம விருந்தினராக வடமராட்சி காரியாதிகாரி திரு ஏ. சி. விஸ்வநாதன் கலந்துகொள்கிறூர். அதிபர் எம். எஸ். சீனித்தம்பி விளையாட்டுப் போட்டியை ஆரம்பித்துவைப்பார்.

## அன்னதானம்

வல்வெட்டித்துறை, செவ்வாய்

செல்வச் சந்நிதி ஆனந்த ஆச்சிரமத்தில் மாணிக்கவாசகர் குருபூசை வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

திரு- மயில் வாகனம் 'மாணிக்கவாசகர்ஏன் பிறந்தார்' எனும் விடயம் பற்றி சொற்பொழி வாற்றினூர். கடைசியில் நாநூற்றுக்கு மேற்பட்டோருக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது.

## விளம்பரம்

### அறிவித்தல்

பல்லவராயன்கட்டுக் கிராமசபை, நாச்சிக்குடா குமிழமுனை றோட்டமைப்பு வேலைக்கு ஒப்பந்தம் அழைக்கப்படுகின்றது. 13-7-66-ம் திகதி பிற்பகல் 1 மணிவரைக்கும் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்ளவிரும்புபவர்கள் மூன்று நாட்களுக்கு முன் கிடைக்கத்தக்கதாக அக்கிராசனருக்கு விண்ணப்பம் அனுப்புதல்வேண்டும். விண்ணப்பிக்காதோர் கேள்விப்பத்திரம்பெற உரிமைப்படார்.

(1) கேள்விப்பத்திரம் விலை ரூபா 5-00.

(2) கேள்விப் பிணைப் பணம் ரூபா 50-00.

இன்னும் வேண்டிய விபரங்களை பல்லவராயன்கட்டுக் கிராமசபை விளம்பர இடத்திலும் வடபிரதேசம், உள்ளூராட்சி உதவி அதிபர் அவர்கள் கந்தோரிலும் இவ் வேலையைக் குறித்த விளம்பரத்தில் கண்டறிந்து கொள்ளலாம்

சி. முகம்மது அப்துல்காதர்
அக்கிராசனர்
பல்லவராயன்கட்டுக் கிராமசபை,
கி. ச. கந்தோர்,
வேரவில்.

26-6-66. 631

## ஜே பி. யு எம்.

யாழ்ப்பாணம், செவ்

அச்சுவேலியைச் சேர்ந்த வழக்கறிஞர் திரு. கா. குணரத்தினம் யாழ். மாவட்டப் பகுதிக்கு சமாதான நீதிபதியாகவும் உத்தியோகப்பற்றற்ற நீதவானுகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

சில ஆண்டுகளாக அச்சுவேலி கிராமசபைத் தலைவராகப் பணியாற்றிய இவர் பல பொதுச்சேவைகளிலும் ஈடுபட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.


சாவகச்சேரி இந்துக்கல்லூரிக் கட்டட நிதிக்காக
அமெரிக்கா, பிரிட்டன், சிங்கப்பூர், யப்பான்
ஆகிய நாடுகளில் பரதநாட்டியம், குச்சிப்புடி, ஆந்திர நடனங்கள் ஆகியவற்றை நிகழ்த்திப் புகழீட்டிய



பிரபல தென்னிந்திய
நடனமணிகள்
**தேஜஸ்வினி—**
**பங்கஜம்**
குழுவினர் அளிக்கும்
**பரத நாட்டிய விருந்து**
30—6—66
வியாழக்கிழமை
மாலை 6 மணியளவில்
**யாழ்ப்பாணம் நகரமண்டபத்திலும்**
2—7—66
சனிக்கிழமை
மாலை 6 மணியளவில்
பம்பலப்பிட்டி
சரஸ்வதி மண்டபத்திலும்

மேற்படி கல்லூரிப் பழையமாணவர்களின் ஆதரவில் நடைபெறவிருக்கின்றது.

நுழைவுக் கட்டணம். ரூபா 25, 10, 5, 3
மாணவர்களுக்கு: ரூபா 2.

சீட்டுக் கிடைக்குமிடம்:

1 ஒட்டோஸ், யாழ்ப்பாணம்.
2 சுபாஸ் கபே, யாழ்ப்பாணம்.
3 யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம் (பஸ் நிலையத்துக்கு முன்னுல்) யாழ்ப்பாணம்.
4 S. R. S. ரெக்ஸ்ரைல்ஸ், கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மைசூர் மகராஷ்டிரா எல்லைக் கிளர்ச்சி: பொலிஸ் சுட்டதில் மூவர் மாண்டனர்!

## பொலிஸ் ஜீப்புகளும் வாகன்களும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன

### இரண்டு பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் அமுல்

பங்களூர், ஜூன் 28

மைசூர்—மகராஷ்டிரா எல்லைக் கிளர்ச்சியில் ஈடுபட்ட ஒரு வன்முறைக்கும் பலின் மீது நேற்று பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மூவர் பலியானுர்கள். பலர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் நேறறுப் பிற்பகல் மைசூர் ராஜ்பத்திலுள்ள ஹரிகா, தாவங்கிரி ஆகிய இடங்களில் நிகழ்ந்தது. இந்த இரு பகுதிகளிலும் நேற்று இரவு முதல் ஊரடங்கு உத்தரவு அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது.

**சிறுவன் பலி**

நேற்று எல்லைக் கிளர்ச்சிக்காரர்கள் ஹரிகர் எனுமிடத்திலுள்ள ரயில் நிலையத்துக்குச் சென்று வன்முறைச் செயல்களில் ஈடுபட்டபொழுது, பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய நேர்ந்தது என்றும் இதன்விளைவாகபன்னிரண்டு வயதுள்ள சிறுவன் ஒருவன் பலியானுன் என்றும் அறிவிக்கப்பட்டது.

**எதிரொலி**

இச்சிறுவனின் உடலை பொலிஸார் ஒரு ஜீப் வண்டியில் கொண்டு சென்றபொழுது சுமார் 2000 பேர் கொண்ட கும்பலொன்று அந்த பொலிஸ் ஜீப்பைத் தடுத்து நிறுத்தி சிறுவனின் பிரேதத்தைப் பறித்துக் கொண்டது என்றும் கூறப்படுகிறது. அக்கும்பல். பொலிஸ் ஜீப்பைக் கடுமையாகச் சேதடபடுத்தியதாகச் சொல்லப்படுகிறது.

**மற்றுமொரு இடத்தில்**

சிறுவன் மீது பொலிஸார் துப்பாக்கி பிரயோகம் செய்த செய்தி மைசூர் ராஜ்யத்தின் மற்றுமொரு பகுதியான தாவங்கிரிக்குக் காட்டுத் தீப்போல பரவவே அங்கும் வன்முறைச் செயல்கள் தலைதூக்கின

தாவங்கிரி ரயில் நிலையத்தில் சுமார் 5000 பேர் கொண்ட கும்பலொன்று பங்களூர்—புனுகடுகதிரயிலை நிறுத்தி ரயில் நிலையத்தைச் சேதப்படுத்தினர். அப்பொழுது பொலிஸார் கூட்டத்தைக் கலைப்பதற்காக கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்தனர். இதனைத்தொடர்ந்து பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபொழுது இருவர் மாண்டனர்.

கிளர்ச்சிக் காரர்கள் ரயில் நிலையத்துக்கும் பொலிஸ் நிலையத்துக்கும் கடுமையான சேதம் விளைவித்தனர். பொலிஸ் வாகனங்களையும் ஜீப்களையும் தீயிட்டுக்கொளுத்தினர். அரசாங்க உடமைகள் மீது கல்வீச்சு சம்பவங்கள் தாராளமாக நடைபெற்றன.

நேற்றுஇங்கு நடைபெற்ற அசம்பாவித சம்பவங்களைத் தொடர்ந்து ஹரிகரிலும் தாவங்கிரியிலும் ஊரடங்கு சட்டம் அமுல் செய்யப்பட்டது. ஏராளமானவர்கள் கைதுசெய்யப்பட்டு பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்

**முதன் மந்திரி கவலை**

கிளர்ச்சியின் போது வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றது குறித்து மைசூர் முதன்மந்திரி திரு. நிஜலிங்கப்பா கவலை தெரிவித்துள்ளார்.

கிளர்ச்சிகளை சில சோஷலிஸ எதிர்ப்புச் சக்திகள் தூண்டிவிட்டு 'வேடிக்கை' பார்க்கின்றன என்றும் இதற்கு மக்கள் பலியாகக்கூடாதென்றும் அவர் கேட்டுள்ளார்.

---

## 127

புதுடில்லி, ஜூன் 28

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே டாஷ்கண்ட் உடன்பாடு ஏற்பட்டதைத் தொடர்ந்து வான வெளியிலும் தரையிலும் எல்லைகளை மீறியது சம்பந்தமாகவும் அந்த உடன்பாட்டைமீறியது குறித்தும் பாகிஸ்தானுக்கு இந்தியா 127 ஆட்சேபங்களை அனுப்பியுள்ளதாக இங்கு ஒரு அதிகாரி தெரிவித்தார்.

## வாலிபரின் தலை துண்டிக்கப்பட்டது

கிளிநொச்சி, செவ்

யாழ்ப்பாணம்-கண்டி வீதி பரந்தனில் தங்கராசா (30) என்னும் வாலிபர் புகையிரதத்தினுல் மோதுண்டு தலை துண்டிக்கப்பட்ட நிலையில் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

கிளிநொச்சி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. மு. யோகலிங்கம் ஸ்தலத்தில் சென்று விசாரணை நடாத்தினுர்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்ற கடுகதி புகையிரதஇன்சின் சாரதி டாக்டர் சொலமன் சாட்சியம்அளித்தார்.

கு.இராமசாமி சாட்சியம் அளிக்கையில்இறந்தவருக்கு உறவினர் ஒருவரும் இல்லையெனவும் தனது கடையில் வந்து சாப்பிடுவதாகவும் இவர் ஒரு சித்தசுவாதீனம் உள்ளவராகக் காணப்பட்டதாகவும் தெரிவித்தார்.

கிளிநொச்சி பதில் வைத்திய அதிகாரி திரு. எச். எல் சுந்தரசிங்கம் பிரேத பரிசோதனை செய்தபோது இறந்தவர் மதுபானம் அருந்தியிருந்ததாயும் தலை துண்டிக்கப்பட்டதினுல் மரணம் ஏற்பட்டது என்றும் கூறினுர்.

மரணவிசாரணை அதிகாரி திரு. யோகலிங்கம் தற்கொலை எனத் தீர்ப்பளித்து காலம் சென்றவருக்கு உறவினர் யாரும் இல்லாதகாரணத்தால் பரந்தன் கிராம சேவையாளரைப் பிரேதத்தை அடக்கம் செய்யுமாறு கட்டளையிட்டார்.

## பூட்பாலிஷ் சிறுவன் கோடீசுவரனுனமர்மம்!

### கோடி ரூபா பெறுமான தங்கம்கடத்தினுராம்

பம்பாய், ஜூன் 28

எட்டுவருடங்களுக்கு முன்னர் பம்பாயின் நடைபாதையில் சப்பாத்துகளுக்கு "பூட் பொலிஷ்" போட்டுக் கொண்டிருந்த ஒரு சிறுவன் இன்று கோடீசுவரனுகமாறியிருப்பது குறித்து சுங்க இலாகா அதிகாரிகள் பம்பாய் மாகாண மாஜிஸ்திரேட் கோர்ட்டில் தெரிவித்தனர்.

ஜே. ஜோசப் என்ற இந்தச்சிறுவன் கடந்த பெப்ரவரிமாதம்இருபத்தேழு லட்சம் ரூபா பெறுமானமுள்ள தங்கக்கடத்தலில் ஈடுபட்டதாகக்குற்றம் சாட்டி இவர் மீதுவழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இவரை இரண்டு லட்சம் ரூபா ஜாமீனில் விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த நபர் ஒரு கோடி ஐம்பது லட்சம் பெறுமானமுள்ள தங்கம் கடத்தியிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

பம்பாயில் பணக்காரர்கள் வாழும் கொலாபாவில் இவருக்கு சொந்தமான மாடி வீடு ஒன்று இருக்கிறது. இவரிடம் இரண்டு கோடி ரூபா சொத்தும்உள்ளதாம்.

(பி. டி. ஐ)

## "சீன எல்லை நெருக்கடி ஓர் தீராத் தலையிடி"

### பிரதமர் இந்திரா பேட்டி

வாஷிங்டன் ஜூன் 28

கம்யூனிஸ்ட் சீனுவினுல் இந்தியாவுக்கு எப்பொழுதும் எல்லை நெருக்கடி இருந்துவரும் என்று இந்திய பிரதமர் திருமதி இந்திரா காந்தி அமெரிக்கா பத்திரிகையொன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

சீனுவின் நோக்கங்களை கணிப்பது மிகவும் கடினமாகும். என்று தெரிவித்தபிரதமர் இந்திரா நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக உழைப்பதில் இரு நாடுகளுமே இரண்டு விதமான கொள்கைகளைப் பின்பற்றி வருகிறது என்று கூறினுர்.

நடுநிலைமை நாடுகளின் தலைமை நாடாக இந்தியா வருமாஎன்று கேட்கப்பட்ட கேள்விக்கு அவர் பதிலளிக்கையில்; அப்படியான எண்ணம் எதுவும் இந்தியாவுக்குக்கிடையாதென்றும் ஆனுல் சூழ்நிலை இதற்குச் சாதகமாகி விட்டதென்றும் கூறினுர்;

நாட்டின் சோஷலிஸக் கொள்கை குறித்து அவர் தெரிவிக்கையில், நாட்டின் நலனுக்காக எதிர்காலத்தில் பிரதமர் நேருவின் கொள்கையினின்றும் சிறிது விலக வேண்டுமானுல் தாம் அப்படியே நடப்பதாகக்கூறினுர்.

## பொதுத்தேர்தலில் தமிழரசு கழகமும் குதிக்கிறது

சென்னை, ஜூன் 28

எதிர்வரும் பொதுத்தேர்தலில்போட்டியிடுவதென்று தமிழரசுக்கழகம் தீர்மானித்துள்ளது. மற்றைய எதிர்க் கட்சிகளுடன் தேர்தல் உடன்பாடு செய்து கொள்வதென்று தமிழரசுக் கழகப் பொதுச்சபை தீர்மானித்துள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகம், சுதந்திரா, முஸ்லிம்லீக் ஆகிய கட்சிகளுடன் திரு. ம. பொ. சிவஞான கிராமணி பேச்சுக்கள் நடத்திய பின்னர் தமிழரசுக் கழகம் போட்டியிடும் தொகுதிகள் பற்றி தீர்மானிக்கப்படும்,

## ம. பொ. சி. மணி விழாவில் சர்வகட்சித் தலைவர்கள் உரை

### பொன்னுடை அணிவித்து உண்மைவீரரென ராஜாஜி பாராட்டினுர்

சென்னை, ஜூன் 28

எளிய நிலையிலிருந்து தமிழகத்தின் தலைவர்களில் ஒருவராக உயர்ந்த திரு. ம. ம. பொ. சிவஞான கிராமணியின் மணிவிழா மயிலை ராஜேஸ்வரி கல்யாணமண்டபத்தில் விமரிசையாக நடந்தது. மணிவிழாவுக்கு மதுரை சர்வகலாசாலை உப அத்தியட்சகர் திரு. தெ பொ மீனுட்சசுந்தரம்பிள்ளை தலைமைவகித்தார்

இவ்விழாவில் பங்குபெறுவதற்கென்றே ராஜாஜி மதுரையிலிருந்து விமானத்தில் வந்துசேர்ந்தார்.

சர்வகட்சி தலைவர்கள், தொழிலதிபர்கள், இலக்கிய கர்த்தாக்கள் வந்திருந்து ம. பொ. சி. க்குப் புகழ்மாலை சூட்டினர்.

**ராஜாஜி பொன்னுடை**

திரு ராஜகோபாலாச்சாரி திரு சிவஞானத்துக்கு பொன்னுடை அணிவித்து நீண்ட ஆயுளும், திடமான உடல் நலனும் பெருக வென்று வாழ்த்துரை வழங்கினுர். திரு. சிவஞானம் உண்மை வீரன். உண்மையான தேசபக்தன். முழுவளப்பெற்ற தலைவன் 40 ஆண்டுகளுககுமுன் அவரை முதன்முதலாகப் பார்த்தேன். வருங்காலத்தில் நன்கு பிரகாசிக்கக்கூடியவரென அப்போதே நினைத்தேன். இன்று அத்தனையும் உண்மையாகிவிட்டதைக் காண்கின்றேன் என்று ராஜாஜி கூறினுர்

"நமதுநாட்டில் முக்கியமாக நடக்கவேண்டிய காரியங்கள் பல இன்னும் இருக்கின்றன, மக்களுக்கு வாழ்க்கையில் இன்றியமையாத அடிப்படைநலன்கள்கிடைக்கச் செய்யவேண்டும். இந்

(2-ம் பக்கம் பார்க்க)

## பிரான்ஸின் அணுகுண்டு பரீட்சை

### கடைசிக்குண்டு வெடிப்பதை அதிபர் டி கோல் அவதானிப்பார்

பாரிஸ், ஜூன் 28

தென்பசிபிக் பகுதியிலிருந்து விலகி நிற்குமாறு சகல நாட்டுக் கப்பல்களுக்கும் விமானங்களுக்கும் பிரான்ஸ் எச்சரிக்கை விடுத்துள்ளது. இன்னும் நான்கு தினங்களில் பிரான்ஸ் தனது அணு ஆயுதப் பரீட்சைகளை (வானத்தில்) இப்பகுதியில் நடத்துகிறதென்று தனது இறுதி எச்சரிக்கையில் தெரிவித்துள்ளது.

தென்பசிபிக்கில்பிரான்ஸ் மொத்தம் ஐந்து அணுக்குண்டுகளை வெடிக்கும். முதலாவது அணுகுண்டை பிரான்ஸ் அநேகமாக சனிக்கிழமை வெடிக்கலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

**கண்டனங்களை புறக்கணித்தது**

அணுகுண்டுகளை வெடிக்க வேண்டாமென்று பல நாடுகள் கோரிக்கை விடுத்திருந்தபோதிலும் பிரான்ஸ் பிரான்ஸ் இக்கோரிக்கைகளை நிராகரித்து தனது அணு ஆயுத பரீட்சைகளை இப்பொழுது நடத்துகிறது.

அணுஆயுத் பரீட்சைத் தடை ஒப்பந்தத்தில் கம்யூனிஸ்ட் சீனுவும் பிரான்ஸுமே கையெழுத்து வைக்காத நாடுகளாகும். [illegible] மையில் சீனு [illegible] வது அணுகுண்டை வெடிக்க வைத்தது ஞாபகமிருக்கலாம்.

**டிகோல் பார்வையிடுவார்**

பிரான்ஸ் தனது பரீட்சைத் தொடரில் ஐந்தாவதும் கடைசியுமான மிகப் பெரிய அணுகுண்டை வெடிக்கும் பொழுது பிரான்ஸ் ஜனதிபதி டிகோல் அதை அவதானிப்பார் [illegible] ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

தெய்வத்திடம் பக்திசெய்ய, எல்லா நற்குணங்களும் தாளுக அமையும். தெய்வத்தை அணுக அணுக நமது கெட்ட குணங்களும் தீமைகளும் நம்மை விட்டகலும்.

—ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர்.


# ஈழநாடு

EELANADU National Tamil Daily. Post Box 49 JAFFNA.
Telegrams : EELANADU Jaffna. Telephone : 389

பராபவ ஆண்டு ஆனி மீ 15 உ (29-6-66)


## மருந்தில்லாத ஆஸ்பத்திரி

உயிரைக் காப்பாற்றக்கூடிய அவசர, அவசிய மருந்துகள் கூடஅரசாங்க ஆஸ்பத்திரிகளிலில்லாமல் இருப்பதை யாழ்ப்பாண மரணவிசாரணை அதிகாரி திரு. கனகரத்தினம் கண்டித்து, இதை அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொணர்ந்திருக்கிருர். காப்பாற்றப்படக்கூடிய பல உயிர்களைக் கூட இழந்து டவேண்டியுள்ளதாகவும் அவர் ஒரு மரண விசாரணையின் போது அளித்ததீர்ப்பில் சுட்டிக் காட்டுகின்ருர். இது பாரதூரமான குற்றச்சாட்டு.

குருநாகலை வியாபாரி ஒருவர் சுன்ஞகம் சந்தையில் தேங்காய் விற்றுக் கொண்டிருக்கையில் திடீரென மயக்கமுற்று விழுந்தார். பின்னர் மானிப்பாய் ஆஸ்பத்திரி மூலம் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபோது அவசர ஊசி மருந்து போடும்படி டாக்டர் கேட்டிருந்தும், அந்த மருந்து ஆஸ்பத்திரியில் இல்லாமையால், அந்த நபர் வார்டில் அனுமதிக்கப்படுமுன்பே இறந்துவிட்டதாக மரணவிசாரணையின்போது தெரியவந்தது. இந்தக் குற்றச்சாட்டுப் புதிதல்ல. ஆஸ்பத்திரி டாக்டர்கள் எழுதிக்கொடுக்கும் பல மருந்துகள் அடிக்கடி ஆஸ்பத்திரியில் இல்லையென்று கைவிரிக்கப்படுவதும் நோயாளர் ஏமாற்றத்துடன் திகைப்பதும் சர்வசகஜம், ஆனல் எமனுடன் போராடிக் கொண்டிருக்கும் ஒருவரைக் காக்கக்கூடிய அவசரமருந்து கூட அரசாங்க ஆஸ்பத்திரியில் இல்லையாயின், இவ்வித ஆஸ்பத்திரிகளை நடத்துவதில் அர்த்தமென்ன?

பொதுமக்களின் பணத்திலேதான் தர்மஆஸ்பத்திரிகள் நடக்கின்றன. பொதுமக்களுக்குப் பயன் படவேண்டுமென்பதே நோக்கம். ஆனல் ஆபத்துக் காலத்திலும் பொதுமக்களுக்கு உதவ முடியாமல் இருப்பதைக் குறித்து யாரும் பெருமையடைய முடியாது. அவசர மருந்துகளும் தட்டிப் போவதின் காரணமென்ன? காலாகாலத்தில் போதிய மருந்துகளைவாங்கிவைக்கவில்லையா அல்லது முக்கிய மருந்துகள் மாயமாக மறைந்து விடுகின்றனவா? இதற்கு யார் பொறுப்பு? வெளியிலே கடைகளில் எந்த மருந்தும் கிடைக்கையில், அவசர காலத்தில் அம்மருந்துகளை விலைகொடுத்து வாங்கி உயிரைக் காக்க வேண்டாமா?

யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல, பொதுவாகதீவிலுள்ள பலபல ஆஸ்பத்திரிகளிலும் இவ்விதம்பல பல குறைகள்இருப்பதாக அடிக்கடி புகார்கள் எழுகின்றன. பணக்காரர்களாயின் அவர்கள் தனிப்பட்ட மருந்துவசாலைகளுக்குச் சென்று தேவையான சிகிச்சையைப் பெறலாம். ஆனல் ஏழைகளோ பொதுவாக அரசாங்க தர்ம ஆஸ்பத்திரிகளையே நம்பியிருக்கிருர்கள். தங்கள் உயிரைக் காத்துக்கொள்ளலாமென்ற ஆவலில் அந்த ஒரே ஒரு கடைசி புகலிடத்துக்குச் செல்கின்றனர். அந்த இடத்தில் டாக்டர்களும், சிப்பந்திகளும் இருந்தும் அவசிய மருந்தில்லையென்ருல், அவர்களுக்குஎப்படிஇருக்கும்? இது எளிய நோயாளருக்குச்செய்யும் பெரிய பாவமாவதுடன், எந்த நோக்கத்துடன் ஆஸ்பத்திரிகள் நடத்தப்படுகின்றனவோ, அதைப் பாழ்படுத்துவதாகும்.

பொதுவாக ஆஸ்பத்திரிகளைப்பற்றி அதிகபுகார்கள் இருப்பதால், இவ்விஷயமாக ஒரு பலமான விசாரணைக்கமிஷன் நியமித்து, குறைகளின் காரணங்களை அறிந்து அவற்றைக் கூடிய சீக்கிரம் நீக்குவதற்கான வழிவகைகளைச் செய்யவேண்டியது அரசாங்கத்தின் முக்கிய கடமை. அதற்கிடையே அவசர அவசிய மருந்துகள் எல்லா ஆஸ்பத்திரிகளிலும் வைத்திய அதிகாரியின் நேர் மேற்பார்வையில் இருக்கும்படி செய்யவேண்டும்.

## பத்திரிகை சபை

வருகிற ஜுலை மாதம் 9-ந் திகதி நடைபெற இருக்கும் சிம்மாசனப் பிரசங்கத்தில் பத்திரிகை சபையை அமைக்கப்போவதாக அறிவிக்கலாமென்று ஒரு செய்தி கூறுகின்றது. அச்சபையின் அதிகாரம், அமைப்பு இவ்விஷயங்கள் பற்றி அமைச்சர்கள் யோசிப்பதுடன், அச்சபையை பிரிட்டனிலுள்ளது போல, அல்லது இந்தியாவிலுள்ளது போல அமைப்பது என்பதுபற்றி தீர்மானிப்பரென்று தெரிகிறது. பத்திரிகைகள் இலங்கையில் அதிகரித்து வருவதாயினும், ஜனநாயகம் திறம்பட நடைபெற பத்திரிகைகள் மேலான முறையில் நடக்கவேண்டிஇருப்பதாலும், இவ்விஷயத்தில் அரசாங்கம் கூடுமான கவனம் செலுத்தி ஆதரவு அளிக்கவேண்டியது அவசியமாகும்.

சென்ற அரசாங்கம் பத்திரிகைகளையும், பத்திரிகைக் காரர்களையும் கட்டுப்படுத்தி, அவர்களது சுதந்திரத்தைப் பறிக்கக்கூடிய முறையில் பத்திரிகைமசோதாவைப் பன்முறை தயாரித்து தோல்வியடைந்தது. இத்தவறை தேசீய அரசாங்கம் செய்யாமல், பத்திரிகைக் காரர்களுக்குக் கூடுமான சுதந்திரமளிப்பதுடன், அவர்களது பத்திரிகைகளின் குறைகளைத் தீர்த்து உதவக்கூடிய முறையில்பத்திரிகைச் சபையை அமைக்கவேண்டியது அவசியமாகும். சிறப்பாக தேசியமொழிப் பத்திரிகைளுக்கும் பிரதேசப் பத்திரிகைகளுக்கும், பத்திரிகைக் காரர்களுக்கும் பல சங்கடங்கள் உண்டு. அமைக்கப்படும். பத்திரிகை சபை, அக்குறைகளை தீர்க்கவும், பத்திரிகைகள்நல்லமுறையில் மக்களுக்கு மேலான தொண்டு செய்து, ஜனநாயகத்தைப் பலப்படுத்தக் கூடிய வகையில் காரியங்கள் செய்வதாகவும் [illegible] தும் விரும்பத்தக்கது.

நிறுத்தப்பட்ட

# சம்பள உயர்வை வழங்கக் கோரிக்கை

பம்பலப்பிட்டி, செவ்

அஞ்சல்தொலைதொடர்பு சேவையாளர் சங்க இருபதாவது ஆண்டு மாநாடும் பேராளர்மாநாடும்இருபதாவது ஆண்டுவிழாவும்சென்ற வாரம் கொழும்பு புதிய நகரமண்டபத்தில் நடைபெற்றது. மாநாட்டின் பல முக்கிய தொழிற்சங்க அலுவல்கள்விவாதிக்கப்பட்டன. குறிப்பாக அரசாங்க அலுவலகங்களில்புதிதாகச் சேர்ந்த தமிழ் ஊழியர்களின் இன்றைய சூழ்நிலை பற்றி ஆராயப்பட்டது. இதுசம்பந்தமாகத் தமிழ் ஊழியர்களின் சார்பில் திரு. இ. திருநாவுக்கரசு கொண்டுவந்த குறைந்த பட்சம் மூன்ரும் வகுப்புச் சிங்களத்தெர்ச்சிப் பரீட்சை சித்தியெய்திய ஊழியரின் நிறுத்தப்பட்ட சம்பள உயர்வு உடனடியாகக் கொடுபட வேண்டும் என்பதும் தடைபெற்ற நிரந்தரம் உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டும் என்ற பிரேரணை கடுமையான விவாதத்திற்குப் பின்னர் அதிகப்படியான வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது

இப்பிரேரணை சம்பந்தமாகத் திரு வில்பிரட்பெரேரா பேசுகையில்இனமத, மொழி வேறுபாடுகாட்டாது தொழிலாளர் எவரும் சமம் என்ற அடிப்படையில் தமிழ் சகோதரர்களது கஷ்டங்களையும் குறைகளையும் நிவர்த்திசெய்யும்படி சிங்களமக்களை வேண்டினர்.

புதுவருடத்தலைவராகதிரு வில்பிரட் பெரேராவே மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

இரண்டாம்நாள்மாநாட்டு நிகழ்ச்சியில் தபாற் தந்தியமைச்சின் நிரந்தரக் காரியதரிசிதிரு. ஜீ. பி. தம்பையா தபால்துறை அதிபர் திரு. ஏ. எல். பெரேரா உட்படப் பல பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

## "அன்றே செய்திருக்கலாம்"

பம்பலப்பிட்டி, செவ்

"21 அம்ச கோரிக்கைளை வழங்கினுல் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படும் என்று கூறும் இந்த சிறிமாவோ அரசாங்கம் கணக்குத் தெரியாத அரசாங்கம், ராஜினாமா செய்யட்டும் என்று கால்பேஸ் திடலில் முழக்கம் செய்த டாக்டர் என். எம் பெரேரா நிதிமந்திரி பதவி ஏற்றவுடன் பணம் சம்பந்தமாக எதையும் இப்பொழுது வழங்கும் நிலையில் இல்லை என்று கையை விரித்து 21 அம்ச கோரிக்கைகளுக்கு குழிவெட்டியதோடு தொழிற் சங்க ஐக்கியத்தையே கலைத்தெறிந்துவிட்டு மார்ச்மாத தேர்தலில் செல்வாக்கை இழந்து வகுப்புவாதத்தை வளர்த்து தற்போதைய தேசிய அரசாங்கத்திற்கு இடைஞ்சல் விளைவிப்பதையே நோக்கமாக திரியும் இவர் திடீரென இன்று 17-50 எனது மூச்சு என்று கூற ஆரம்பித்துள்ளது வேடிக்கையாக இருக்கிறது. அன்று நிதிமந்திரியாகவந்த இவர்இதைஅன்றே கொடுத்திருக்கலாம்."

இவ்வாறு பதுளை, பசறை, அப்புத்தளை ஆகிய இடங்களில் கடந்த 25-ம் திகதி நடைபெற்ற தோட்டத் தலைவர்கள், முக்கியஸ்தர்கள் கூட்டத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுக்காரியதரிசி திரு. எம் எஸ் செல்லசாமி சொற்பொழிவாற்றுகையில் கூறினர்.

## திறப்பு விழா

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் மகாஹாட்வெயர் ஸ்டோர்ஸ்-இன்டஸ்றியல் என்ஜினிட்ரிங்வேக்ஸ் ஸ்தாபனத்தை திரு.ஜி.ஜி. பொன்னம்பலம் இன்று திறந்துவைப்பார்.

## மணிவாசகர் குருபூஜை

யாழ்ப்பாணம், புதன்

'ஆன்ம ஈடேற்றத்தின் தத்துவ நிலைகளை படம் பிடித்துக்காட்டி நாயன்மார்களுள் முதலிடம் வகித்தவர் மணிவாசகரே. இவர் அளித்த திருவாசகம் கற்ருேரையும் மற்ருேரையும் பக்திவழியே செல்ல வழி வகுக்கின்றது. மனித இயல்புகளைப்பற்றி தமது சிவபுராணத்தில் இவர் குறிப்பிட்டதிலிருந்தும் பிட்டுக்கு மண்சுமந்த சருக்கத்தில் இறைவனுக்கு ஏவலாளர் பிரம்படி கொடுக்க அவ்வடி எல்லோர்மீதும் பட்டதிலிருந்தும்இறைவன்ஒவ்வொரு ஆன்மாக்களிடத்தும் இரண்டறக் கலந்திருக்கிருன்என்ற சித்தாந்தக்கருத்தை அவர் தெரிவு படுத்துகிருர்' என்று பண்டிதர் இரா. சிவசுப்பிரமணியம் யாழ்ப்பாண டியூடோறியல் கல்லூரியில் மாணவர் தேர்ச்சிச்சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற மணிவாசகர் குருபூசையில் பேசுகையில் கூறினர்.

## டி' கோல்

வால்கோகிராட், ஜூன் 26

ரஷ்யாவில் சுற்று விஜயம் செய்து வரும் பிரெஞ்சு அதிபர் ஜெனரல் டி' கோல் இன்று லெனின் கிராட்டிலிருந்து வால்கோஇராட்டுக்கு வந்து சேர்ந்தார்.

# ஐயாறன் எழுதுகிறார்

ஒரு கத்தோலிக்க பாதிரியார் சைவசித்தாந்தத்தைப் பற்றிப் பேசுவதாயும் அவர் யாழ்ப்பாணம் வந்திருப்பதாயும் ஒரன்பர் கூறியதும் அவரைப் பார்த்து, அவர் பேசுவதைக் கேட்க மிக ஆவலாக இருந்தது.

அவர் யார் தெரியுமா? சென்னை லோயலாக்கல்லூரி தத்துவப் பேராசிரியரும், 'தமிழ் கல்சர்' என்ற ஆங்கில சஞ்சிகை ஆசிரிய குழு செயலாளருமான வண. சுவாமி இக்னேஷியஸ் இருதயம் அவர்கள் தான். எதிர்பாராதமுறையில் ஓரிடத்தில் அவர் அறிமுகமானதும் சில நிமிடங்களில் என் மனதைக் கவர்ந்துவிட்டார். அன்பும், அறிவும், பண்பும் பிரகாசிக்கிறது அவர் முகத்தில்.

'இக்னேஷியஸ்' என்ருல் என்ன என்று கேட்டதற்கு உடன், "அக்கினி" என்று விளக்கம் தந்தார். சைவசித்தாந்தம் மட்டுமன்றி, தாயுமானவர், பட்டினத்தார் முதலிய ஞானிகளின் பாடல்கள் மட்டுமன்றி, தேவார திருமுறைகளிலும், பகவத்கீதை, உபநிஷத் முதலியவற்றிலும் அவர் தேர்ச்சிபெற்றிருப்பது சொற்ப நேரத்தில் தெரிந்தது.

யாழ்ப்பாணம் திவ்யஜீவன சபையின் கூட்டுப்பிரார்த்தனையில் அவர் சில நிமிஷங்கள் பேசுகையில் அப்பர் சுவாமிகளின் 'காயமே கோயிலாக...' என்ற பாடலைப் பாடி, தெளிவாக விளக்கம் தந்ததைக் கேட்க வியப்படைந்தேன்.

மதுரை ஆதீன சந்நிதானத்திடம் அவர் பேசிக்கொண்டிருக்கையில், "இவ்வளவு தமிழை நீங்கள் எப்படிக் கற்றீர்கள்" என்று கேட்டதற்கு "இச்செல்வமெல்லாம், என் பரம்பரைச் சொத்துத்தானே" என்ருராம்!

நாளை மாலை யாழ் அரச மாளிகையில் நீதியரசர் தம்பையா, வண. சுவாமியை உபசரித்துக் கௌரவிக்குமுகமாகத் தேநீர் விருந்து அளிக்கிருர். பின்னர் கலந்துரையாடலும் நடைபெறுகிறது.

ஜுலை 2ந் திகதி யாழ்ப்பாண நகரமண்டபத்திலே திவ்யஜீவன சபை ஆதரவில் நடைபெறும் சர்வசமய குருமார்விழாவில்' அஸதோமா, சத்தமய..." (அசத்தற நீக்கி சத்தே வருக) எனும் பொருள்பற்றிச் சுவாமி பேசுவதாகத் தெரிகிறது.

சமய குருமார்கள் அனைவரும் எல்லாச் சமயங்களையும் படித்து, அவற்றைப் பரஸ்பரம் கௌரவித்தால் சமயப்பூசல்களும், மதமாற்றங்களும் இல்லாமல் இந்த உலகமே எவ்வளவு நன்ருக இருக்கும்!

ஃ ஃ ஃ

சுமார் 25 வருடங்களுக்கு முன்பாகக் கொழும்பிலே ஒரு பத்திரிகையில் ரிப்போட்டராக இருந்த ஆனந்ததிஸ்ஸா டி ஆல்விஸ் என்ற இளைஞர் இப்போது ராஜாங்க அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியாக நியமிக்கப்பட்டுள்ளதை அறிய இங்குள்ள பத்திரிகைக் காரர்களுக்கெல்லாம் பெருமையாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கவேண்டும்.

நிரந்தரக்காரியதரிசி பதவி சாதாரணமாக அனுபவமிக்க ஸி. ஏ. எஸ். என்ற இலங்கை நிர்வாக சர்வீஸைச் சேர்ந்தவர்களுக்கே அளிக்கப்பெறும். ஆனல் ஒரு பத்திரிகைக்காரருக்கு

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

அப்பதவி கிடைப்பது இதுவே முதல் தடவை. பத்திரிகையை விட்டுவிட்டு, ஆனந்தா, பின்னர் அரசியலில் ஈடுபட்டார். வால்டர் தாம்ஸன்ஸ் என்ற புகழ் பெற்ற விளம்பரக் கம்பெனித் தலைவராகி அதை அபிவிருத்திசெய்தார். சேர் ஜோன் கொத்தலாவலைக்குக் காரியதரியாக இருந்து உலகம் சுற்றினர்.

நிர்வாகத்திலும், பேச்சிலும் நல்ல திறமைசாலி. இவ்வளவு திறமையும் அனுபவமும் மிக்க ஆனந்தா, புதிய பதவியை வெற்றியுடன் வகித்து நாட்டுக்குப் பல நன்மைகள் செய்வார் என்று நம்பிக்கையுடன் வாழ்த்துகின்றேன்.

ஃ ஃ ஃ

பிணியுடை யாக்கை தன்னைப் பிறப்பறுத் துய்ய வேண்டில்
பணியுடைத் தொழில்கள் பூண்டு பத்தர்கள் பற்றிலை
துணிவுடை அரக்கனேடி எடுத்தலுந் தோகை அஞ்ச,
மணிமுடி பத்தினுதாரை [illegible] காடனரே.

—அப்பர் சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதந்திரக் கட்சியின் புதிய பாதை

கொழும்பு, திங்கள்

சுதந்திரக்கட்சி இப்போது புதியவகையில் தனது பிரசாரத்தை மேற்கொள்ள உத்தேசித்துள்ளது. வகுப்புத்துவேஷத்தை தூண்டிவிடக்கூடிய பிரசாரத்தை சற்றுக்குறைத்துமதஉணர்ச்சிகளைத் தூண்டிவிடக்கூடிய வகையில் பிரசாரத்தை மேற்கொள்ள அது தீர்மானித்துள்ளது.

கட்சியின் பத்திரிகையான 'சிங்கள' சமீப காலங்களில் செய்துவரும் பிரசாரத்திலிருந்து இது தெரியவருகிறது

கட்சியின் புதிய பிரசாரமுறை சிறுபான்மை இன, மத மக்களுக்கு பாதுகாப்பளிக்கும் 29-வது ஷரத்தை நீக்கும் கோரிக்கைக்கு சகல பௌத்த மதத்தவர்களின் ஆதரவையும் தேடுவதாக இருக்கும்.

இந்த நோக்கத்தோடு கட்சி தொடர்பான பிரசாரக்கூட்டங்களை முக்கிய நகரங்களில் நாடத்தவிருக்கிறது.

இந்தக்கோரிக்கை எந்த விதத்திலும் தீவிரவாதக் கொள்கையாகவோ துவேஷத்தை தூண்டுவதாகவோ இருக்காது என 'சிங்கள' அபிப்பிராயம் தெரிவித்துள்ளது.

29-வது ஷரத்தை நீக்க போராடுமாறு 'சிங்கள' அகில இலங்கை பௌத்த காங்கிரஸையும் மற்றும் முக்கிய பௌத்த இயக்கங்களையும் கேட்டுள்ளது.

## மைசூரில் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம்

புதுடில்லி, ஜூன் 27

மைசூரில் ரயில் ஒன்றை நிறுத்த ஒரு கோஷ்டியினர் முயன்றபோது அதனைத் தடுக்க பொலிஸார் எடுத்த நடவடிக்கையின் போது ஒருவர் துப்பாக்கி சூட்டுக்கு பலியானார் ஒருவர் காயமடைந்தார்.

## பாராட்டுக் கூட்டம்

யாழ்ப்பாணம், செவ்

திரு. வே. கிருஷ்ணபிள்ளை சமாதான நீதவான் நியமனம் பெற்றதைக் கௌரவிக்குமுகமாக ஒரு பாராட்டுக் கூட்டம் யாழ்ப்பாணம் மலாயன் பென்ஷனியர்ஸ் சங்க காரியாலயத்தில் நடைபெற்றது. வட மாகாண அச்சிடுவோர் சங்கத்தினர் இந்தப் பாராட்டுக் கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்தனர். திரு. எஸ். குமாரசாமி தலைமை வகித்தார்.

மிருசுவில்

## கி. ச. இடைத் தேர்தல் முடிவு

யாழ்ப்பாணம், செவ்.

மிருசுவில் கிராம சபையின் 6-ம் வட்டார இடைத் தேர்தல் இன்று நடைபெற்றது. திரு. கே. சுந்தரம் 13 அதிகப்படியான வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவருடன் போட்டியிட்ட திரு. ரி. வாலகிட்டினனுக்கு 50 வாக்குகள் கிடைத்தன.

## டெலிஸார் மீது வழக்கு

பருத்தித்துறை, செவ்.

பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் ஒருவரை சட்டத்துக்கு முரண்பட்ட வகையில் அடைத்து வைத்ததாக குற்றம் சாட்டி பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் குறறம் சாட்டி தொடரப்பட்ட வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. பதில் நீதிபதி திரு, கே. இரத்தினசிங்கம் வழக்கை விசாரணைக்கு எடுத்து அடுத்த மாதம் 26-ம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

## பாரதகடற்படை வலுப்படுத்தப்படும்

புதுடில்லி, ஜூன் 27

பாரத கடற்படை வலுப்படுத்தப் படவிருப்பதாக கடற்படைத் தலைவர் வைஸ் அட்மிரல் சட்டர்ஜி தெரிவித்துள்ளார்.

இதனை முன்னிட்டு வெளிநாடுகளிலிருந்து நீர்மூழ்கிக் கப்பல்களும் வேறு கப்பல்களும் வாங்க நடவடிக்கை மேற்கொள்ளப் படுமென்றும் அவர் கூறியுள்ளார்.

## பட்டருக்கு தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணத்தில் இப்பொழுதுபட்டருக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. விலைக்கட்டுப்பாட்டுப் பொருளானபட்டரை வியாபாரிகள் எவரும் விற்கமுன் வரவில்லைப்போல் தெரிகிறது.


# யாழ்ப்பாண மக்களே!

PURE BEVERAGES CO. LTD.
LION BRAND
COLOMBO 2

உங்களுக்குத் தேவையான தித்திப்பு நிறைந்த

**போட்டலோ**

**கொக்கா கோலா**

"சிங்கம்" மார்க்

குளிர் பானங்களையும் உங்கள் அபிமான பானமான

**தங்க முலாம் அன்னாசிப்பழ ரசத்தையும்**

எங்கள் ஏஜண்டான

**என். எம். சுல்தான் மொஹிதீன் ஹாஜியார் அண்ட் பிரதர்ஸ்**

நிர்: 125, கே. கே. எஸ் வீதி, — யாழ்ப்பாணம்

ஸ்தாபனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலை பேசி: 531 — யாழ்ப்பாணம்.

மாநகரசபை எல்லைக்குள்
கடமையே கண்ணுயுள்ள
எங்கள் விநியோக ஊழியர்கள் மூலம்
**இலவச விநியோகம்**

**பியுவர் பிவரேஜஸ் கோ. லிமிட்டெட்**

Coca-Cola TRADE MARK REGD.

**PURE BEVERAGES Co LTD.**

யூனியன் பிளேஸ், கொழும்பு — 2

LION BRAND TRADE MARK


ஆசிரியருக்குக் கடிதம்

## பல்கலைக்கழகத்தில் சைவ ஆலயம்

ஈழத்திலே இரண்டாவது பெரிய இனத்தைச் சேர்ந்த சைவ மாணவர்கள் கல்வி பயின்றுவரும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில், மதவழிபாடு செய்வதற்கு அங்கு ஒரு சைவ ஆலயம் இல்லாதது பெருங்குறை பல வருடங்களாக இருந்துவருகின்றது. வருடந்தோறும் ஆயிரத்திற்கு மேற்பட்ட சைவ மாணவர்கள் கல்விகற்க அங்கு செல்கிறார்கள். கல்வி பயிலும் மாணவர்களிடையே மதநம்பிக்கையும், தெய்வ வழிபாடும், பரந்து காணப்படவேண்டும். இந்த மதப்பற்றை வளர்ப்பதற்கு தகுந்த சமயவழிபாட்டுநிலையங்கள் கல்வி பயிலும் கலாசாலைகள் அமைந்திருக்க வேண்டியது அவசியம். வருங்கால உலகத்தை வழி நடத்திச் செல்லும், கல்விமான்களை உருவாக்கும் பல்கலைக்கழகம், அவர்களை நல்லொழுக்க சீலர்களாக வாழ வழிவகுத்துக் கொடுக்கக் கூடிய, சமய அறிவையும் ஆத்மீகஎழுச்சியையும் பெறுவதற்கு ஏற்பமதவழிபாட்டு நிலையங்களை அமைத்துக் கொடுக்கவேண்டியது, மிக மிக அவசியம்.

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பலவேறு மதத்தைச் சேர்ந்தவர்கள் கல்வி பயில்கிறார்கள். ஒவ்வொரு மதத்தைச் சேர்ந்தவர்களுக்கும், தனித் தனி மதவழிபாட்டு நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன ஆனால் சைவ சமயத்தைச் சேர்ந்தவர்களுக்கு இந்த வசதியும் வாய்ப்பும் கிடைக்கவில்லை. ஈழம் வாழ் சைவர்களோ சைவ ஸ்தாபனங்களோ அங்கு ஒரு சைவஆலயம் நிறுவும் பணியில் அக்கறை காட்ட முன் வராதது ஏன்?

ஓரிரு சைவர்கள் கூடிவிட்டாலும், மக்கள் நடமாட்டம் குறைந்த இடத்தில் கூட ஓர் ஆலயத்தை அமைத்துவிடுவார்கள். நாட்டின் பல பாகங்களிலிருந்து ஆயிரக்கணக்கானவர்கள் கல்வி பயிலச்செல்லும், மிகப் பிரசித்திபெற்ற பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சைவர்களுக்கு ஒரு ஆலயம் இதுவரையும் நிறுவப்படாததையிட்டு நாம் வெட்கப்படாமல் இருக்க முடியுமா?

அங்கு சைவஆலயம் நிறுவுவதற்காக பல வருடங்களுக்குமுன் வழங்கப்பட்ட நிலம்தேடுவாரற்ற நிலையில் பத்தை அடர்ந்த காடாகி இருப்பதாக அறியும்போது வேதனையடைகிறோம். சமய விழிப்புணர்ச்சி கொண்ட சைவ மாணவர்களும், பேராசிரியர்களும் இந்த நிலத்தைச் சிரமதானமூலம் சீர்ப்படுத்திச் சைவ ஆலயம் அமைக்கும் பணியில் ஈடுபட்டுவருகின்றார்கள். இந்த உயரிய பணிக்கு ஈழம்வாழ சைவர்களும், சைவ ஸ்தாபனங்களும் பேராதரவு நல்கினல் வெகுவிரைவில் ஒரு சைவ ஆலயம் பேராதனையில் உருப்பெறும் என்பதில் ஐயமில்லை.

ஐ. தி. சம்பந்தன்
கொழும்பு—13

## சங்கீத ஆசிரியர் நியமனம்

பம்பலப்பிட்டி. செவ்

நாடு முழுவதிலும் உள்ள பாடசாலைகளில் காலியாக இருக்கும் சங்கீத நடன ஆசிரியர்களின் பதவி வெகு விரைவில் பூர்த்தி செய்யப்படும் இதற்கான உத்தரவை கல்வி மந்திரி வழங்கியுள்ளார். இதற்கான நேர்முகப்பரீட்சைகள் நடந்துவிட்டன என்பதும் 200 கல்வி ஸ்தானங்களுக்கு 2000 பேர் மனுச் செய்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வித்தியாதிபதிக்கு மகஜர்

யாழ்ப்பாணம் புதன்

இவ்வருடம் பெப்ரவரியில் விண்ணப்பம் கோரப்பட்டிருந்த தலைமையாசிரியர், அதிபர் பதவி ஆகியவற்றைத் தாமதமின்றி உடனடியாக நிரப்புமாறு கோரி அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் வித்தியாதிபதியிடம் மகஜர் சமர்ப்பித்துள்ளது.

## 600 மாணவர்களுக்கு அனுமதி

பம்பலப்பிட்டி, செவ்

வித்தியாலங்கார பல்கலைக்கழகம் இந்தவருடம் 600 மாணவர்களை அனுமதிக்கும் 500 மாணவர்களும் 100 ஆசிரியர்களும் இதில் அடங்குவர்.

## பட்டப்பகலில் 12,000 ரூபா அபேஸ!

ருகம, செவ்

வத்தளையில் பட்டப் பகலில் முதலாளி ஒருவரிடமிருந்து 12,000 ரூபா கொள்ளையடிக்கப்பட்டது வெலிசறையில் கூ. மொ. வி. நிலையத்துக்கு சாமான் வாங்கவென இவர் சென்றுகொண்டிருந்த போது பாற்சாலையில்பால்அருந்தஎண்ணி அங்குள்ள மேசையில் பணப்பையை வைத்து விட்டுத் திரும்பிப்பார்க்கையில் பணப்பை ஆபேஸ் ஆகிவிட்டது அந்தப்பணப்பையில்12,000 ரூபா இருந்ததாம். பொலிசார் இது குறித்து விசாரணை நட்த்தி வருகின்றனர்.

## நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம் செவ்.

இன்று மாலை 5 மணிக்கு கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் நடைபெறவிருக்கும் எழுத்தாளர் எஸ். பொன்னுத்துரையின் 'வீ' என்னும் சிறுகதைத் தொகுப்பின் அறிமுகவிழாவில் உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுவார்.

இவ்விழாவில் மலாயாத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் கலந்துகொண்ட பேராசிரியர் எப். எக்ஸ். சி. நடராஜா, வித்தியோதய பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர் திரு. கா. சிவத்தம்பி, மகாகவி, திரு. சு. வேலுப்பிள்ளை, திரு. எம். ஏ. ரஹ்மான் உட்படப்பலர் சொற்பொழிவாற்றுவர்.


**வியாபாரம் பெருக விளம்பரம்செய்க**

## விற்பனையாளர் தேவை

வந்தாறுமூலை,
ஏறாவூர்,
காத்தான்குடி,
ஆரைப்பற்றை,
கல்லாறு,
களுதாவளை,
நீலாவணை,
சம்மாந்துறை,
அக்கரைப்பற்று,
நிந்தாவூர்,
பொத்துவில்.

ஆகிய இடங்களில் 'ஈழநாடு' பத்திரிகை விற்பனை செய்வதற்கு ஏஜன்டுகள் தேவை.

மனுச்செய்யவும்;
விநியோக மனேஜர்,
ஈழநாடு,
த. பெ. எண் 49,
யாழ்ப்பாணம். 620


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழரின் ஆங்கில நூல்

வெள்ளவத்தை, செவ்.

இலங்கையின் வரலாற்றிலே முதல்முதலாக ஏற்றுமதிக்கான வழிவகைகள் என்னும் ஆங்கிலப் புத்தகம் இணுவிலைச் சேர்ந்த இ. இரத்தினசபாபதி என்பவரினால் வெளியிடப்பட்டுள்ளது.

புதிதாக ஏற்றுமதி செய்யக்கூடிய பொருட்கள் யாவை? அவற்றிற்கான வழிமுறைகள் யாவை என்பதுபற்றி ஆராயும் இந்நூலைப் பிரதமரைப் போஷகராகக் கொண்ட இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சங்கம் வெளியிட்டுள்ளது.

முன்னாள் மத்திய வங்கி கவர்னர் திரு ஜயவர்த்தனா பிறவுன் அன் கம்பனி அதிபர் திரு எட்மன் கூறே, சிலோன் செம்பர் ஒவ் கொமர்ஸ் ஸ்தாபன அதிபர் திரு விஜயசிங்கா ஆகியோரின் கருத்துரைகளும் இடம்பெற்றுள்ள இதன் ஆசிரியராக இணுவிலைச் சேர்ந்த திரு இ. இரத்தின சபாபதி வெளியிட்டுள்ளார்.

பிரித்தானிய கவுன்சிலின் உபகாரச் சம்பளம் பெற்று மேற்கு நாடுகளுக்கு விஜயம் செய்ய இருக்கும் இவர் வெளிநாடுகளில் இலங்கை பற்றிய பிரசாரத்தில் முக்கிய கவனம் செலுத்தி அதற்கான ஆக்கபூர்வமான பணிகளில் இலங்கை அரசாங்கத்தின் ஆதரவுடன் விரைவில் ஈடுபட இருக்கின்றார்.

## சிறுபான்மை தமிழர் கோரிக்கை

உரும்பராய், செவ்.

"சிறுபான்மைத் தமிழர்களால் சட்டப்படி கோரப்படும் உரிமைகளை தமிழ்த் தலைவர்கள் இப்போது தட்டிக்கழித்துவிடமுடியாது. ஏனெனில் அவர்கள் தான் இப்போது நாட்டை ஆள்பவர்களாக இருக்கிறார்கள். குறிப்பாக ஸ்தலஸ்தாபனங்களின் பொறுப்புக்கள்யாவும் இவர்கள் கையில்தான் அடைக்கலம் புகுந்திருக்கிறது. இந்த நல்ல வாய்ப்பான வேளையில் இவர்களால் இந்த மக்களின் சட்டபூர்வமான உரிமைகளை வென்றெடுத்துக்கொடுக்காவிட்டால் பின்பு எந்தக்காலத்திலுமே இவர்களால் சிறுபான்மைத் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க முடியாது. தமிழர்களின் உரிமைகளைப்பெற்றெடுக்க மாவட்ட சபைகளோ, அல்லது வேறெந்த அமைப்பு முறைகளோ பெறுவது சாத்தியப்படினும். இந்த மக்கள் மேல் உயர்ஜாதியினர் காட்டும் அடக்கு முறைகளையும் ஆதிக்கத்தையும் தலைவர்கள் நீக்கத்தவறின் மாவட்ட சபைகளோ, அல்லது வேறெந்த அமைப்புமுறைகளோ பெறுவது பகற்கனவாக முடிந்தாலும் முடியலாம்"

உரும்பராய் வாகையடி வீதியில் நேற்று நடைபெற்ற சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியின் கூட்டமொன்றில் பேசுகையில் திரு. சே. டானியல் இவ்வாறு குறிப்பிட்டார்.

திரு. க. மார்க்கண்டு தலைமையில் நடந்த இக்கூட்டத்தில், திருவாளர்கள் ஆ குலேந்திரம் கிராமசபை உறுப்பினர் க. ஆப்புத்துரை ஆகியோர் பேசினர்.

## அபிவிருத்திச்சபை நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், புதன்

காரை அபிவிருத்திச சபை நிர்வாக உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்; வழக்கறிஞர் வி. தில்லைநாதன், உபதலைவர்கள்: திரு. எஸ். கந்தையா, திரு. எஸ். சிவகுரு, செயலாளர்: திரு. க. க, சுப்பிரமணியம், உதவிச் செயலாளர்: எஸ். யோகலிங்கம், தனாதிகாரி: த. நல்லதம்பி, திருவாளர்கள் ஏ கந்தையா, ஆர். ஏ. கந்தையா, வி. ஈ. அம்பலம், என். கே. விஜயசிங்கம், ரி. வேலுப்பிள்ளை, ஐ. இ. சம்பந்தன் ஆகியோரைக்கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

## பண்டிதமணியின் 68-வது பிறந்தநாள்

உரும்பிராய், செவ்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் 68-வது பிறந்ததினம் இன்றாகும். கச்சியப்பசிவாசாரியசுவாமிகள் பாடிய கந்தபுராணத்தின் பகுதியான தக்ஷகாண்டத்துக்கு பண்டிதமணி உரையெழுதிப் பூர்த்தி செய்துள்ளார். இந்நினைவை பண்டிதமணி அளிக்கும் 68-வது பிறந்த தினப்பரிசாக மிகவிரைவில் வெளிவர இருக்கிறது.






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வேனில் விழா

# கவி பாடும் படலம்

பத்தனின் கொட்டிலில் அன்ெருரு நாள் அவனுடைய பத்தகோடிகள் வேனில் விழாவில் ஊறித்திளைத்து முக்கால் பருவம் அடைந்தபோது எல்லோருக்கும் கவி பாடும் திறமை உண்டானது. ஒவ்வொருவரும் தத்தமக்குத் தெரிந்த வாலாயமான பாணியில் பாடல் இயற்றத் தொடங்கினர்கள்.

கருங்குட்ட முதிதுராமலிங்கர் ஒரு சிறந்த மருத்துவர். தன்வந்திரி, மச்சமுனி, போகர், அகத்தியர் முதலானேர் செய்த மருத்துவப் பாடல்கள் அவர் நினைவுக்கு வந்தன. உடனே அவர் வாயில்சிறந்த கவிதை ஒன்று மலர்ந்தது.

திருச்சிற்றம்பலம்

கேளப்பா தோனரச்சி
பூமணத்தி பாளை
நெட்டியாய்க் கட்டியிரு
முட்டி நிறைவாக
சூளப்பா காலையிலே
மாலையிலே நன்ருய்
நயமான சுள்ளினுடன்
நாக்குளிர வுண்டால்
ஆளப்பா காசமொடு
காமாலை குன்மம்
ஆருத வெண்குட்டங்
கருங்குட்ட மாறும்
வேளப்பா பொன்மேனி
மினுமினுப்பு மேறும்
மேலன மச்சமுனி
மேதினிக்கே சொன்னன்

திருச்சிற்றம்பலம்

மற்றவர்கள் சும்மா விட்டு விடுவார்களா? காமாலை நன்னியர் திருவாய்மலர்ந்தருளியதாவது:

பாழான குன்மமொடு
காமாலை மாறப்
பனங்கள்ளும் பருகாத
வாயென்ன வாயே!

அது கேட்டு மாப்பாணமுதலியார் சொல்வார்:

கருங்குந்தி செங்குந்தி
கருப்பைச்சி தந்த
இருங்கள்ளுக் கொள்ளாத
வயிறென்ன வயிறே!

அது கேட்டு பொக்கைவாய் முத்துப்பிள்ளை பாடுவார்:

வெறிமுற்றி நெறிகெட்டு
வேதாளமானேர்
வேதங்கள் கேளாத
செவியென்ன செவியே!

அது கேட்டு திகம்பர அடிகளார் கூறுவார்:

ஏழென்றும் எட்டென்றும்
எண்ணுது பாளை
நாளொன்று கொள்ளாத
நாளென்ன நாளே!

அது கேட்டுச் செல்லூர் ஆசான் சொல்வார்:

உடைவிட்டு நடைகெட்டு
வருகின்ற கோலம்
கடைவிட்டு நோக்காத
கண்ணென்ன கண்ணே!

அது கேட்டுக் கல்லூரி மாணவர்குழாம் திருப்புகழ் சந்தத்தில் 'கோரஸ்' பாடியது:

மரத்தின் அடியினில் வகுத்த
குடில் தொறும்
மனத்தின் நிறைவொடு
புகுவோமே
அருந்தி மிகமிகக் கருத்து
மயலுற
அடுத்து முறைமுறை
விடுவோமே
சிரத்தின் அசைவொடு
திளைத்த அடியினை
திருத்த முறவழி திரிவோமே
ருருத்த ரெமையினி விலக்க
லறிவுகள்
உரைத்த லுரிமைகள்
உடையாரே!

## நோயாளி - டாக்டர் 'லடாய்'

ஜோன் பாரிமூர் ஒரு பிரசித்திபெற்ற நடிகர். மிகத் திறமான குடிவகைகளையும் சாப்பாட்டு வகைகளையும் அருந்துவார் குஷியானபேர்வழி. வாழ்க்கையின் சுவைகளை நன்ருக ரஸித்து அனுபவிப்பவர். அப்படிப்பட்ட மனிதருக்கு பெரிய சுகயீனம் ஒன்று வந்துவிட்டது. வைத்தியர்கள்மிகவும் இறுக்கமான கட்டுப்பாடுகளையும் தடைகளையும் விதித்துவிட்டார்கள் இவ்வளவுதான் சாப்பிடலாம், இவ்வளவுக்குமேல் குடிக்கப்படாது, வெளியே எங்குக் போகப்படாது—என்றெல்லாம் கட்டளைகள் போட்டுவிட்டார்கள்

ஜோரான வாழ்க்கை நடத்தி பழக்கப்பட்டவருக்கு இதெல்லாம் பெரிய உபத்திரவமாய் போய்விட்டது.

ஒருநாள் அவருடைய நேர்ஸ் அவருக்குரிய சொற்ப ஆகாரம், பானம் முதலியவற்றை அறையில் வைத்துவிட்டு வெளியே போகும்போது, 'இன்னும் ஏதாவது தேவையா?' என்று கேட்டாள்

பாரிமூருக்கு வெந்த புண்ணில் வேல் ஏற்றுவதுபோலிருந்தது.

'ஆமாம், மறந்துவிட்டேனே: ஒரு தபால் முத்திரை தருவீர்களா? கொஞ்சம் வாசிக்கலாமென்று ஆவலாயிருக்கிறது' என்ருர்,

ஃ ஃ ஃ

ஒரு மனிதனுக்கு பல்வலி தாங்க முடியாமற்போய்விட்டது ஆனல் பல் வைத்தியரிடம் போவதற்கு தைரியம் வரவில்லை. கடைசியில் ஒருபடியாக மனதைத் திடப்படுத்திக்கொண்டு டாக்டரிடம் போனன். பல்லைப் பிடுங்கவேண்டுமென்று அவர் சொன்னர். அவனுக்கு மறுபடியும் கிலி பிடித்துவிட்டது டாக்டர் அவனுக்குத் தைரியம் உண்டாக்குவதற்காக கொஞ்சம் விஸ்கியைக் குடிக்கக் கொடுத்துவிட்டு சற்றுநேரம் பொறுத்து 'இனிமேல் பிடுங்கலாமா?' என்று கேட்டார். அவன் அப்பொழுதும் தயங்கினன். டக்டர் இன்னும் கொஞ்சம் விஸ்கியை கொடுத்துவிட்டுது 'இப்பவாவது தைரியம் வந்துவிட்டதா?' என்று கேட்டார். அவன் மறுபடியும் 'இல்லை' என்று தலையசைத்தான். மூன்ருவது விஸ்கியையும்கொடுத்துவிட்டு டக்டர் கேட்டார்.

'என் பல்லை எவனுவது தொட்டுப்பார்க்கமுடியுமா? என்று பதில் வந்தது.

## வழக்கம் எப்படித் தோன்றியது

ஊருக்குஊர் பல விசித்திர பழக்க வழக்கங்கள் இருக்கின்றன. அவற்றின் தோற்றுவாய் காலப் பெருவெள்ளத்தில் கரைந்து மறைந்துபோய் விடுகின்றன அவை எப்படித்தோன்றின, எப்பொழுது தோன்றிது, ஏன் தோன்றின என்பவற்றை ஆராயும்பொழுது சில வேடிக்கையான உண்மைகள் வெளிவரும்.

இந்தப் பழக்கவழக்கங்களில் சில நாளுக்குநாள்நாகரீகச் சுழலில் அகப்படுத் தேய்ந்து மறைந்து போவதையும் நாம் கண்கூடாகக் காண்கிறேம். பழையன கழிதல் இயற்கையே ஆயினும் அவற்றின் தோற்றம், அனுஷ்டானம் ஆகியவற்றை அறிந்து கொள்ளுதல்மூலம் மக்களின் வரலாற்றை அறிந்து கொள்ளவும் உதவியாகிறது. ஆகையினல் இவ்வழக்கங்களைப் பற்றிய அடி நுனி யாவற்றையும் சேகரித்துப் பாதுகாக்க வேண்டும்.

உதாரணமாக, போர்த்துக்கிசர் ஆட்சியில் யாழ்ப்பாணத்தில் நடந்த மத சம்பந்தமான அக்கிரமங்களை அடிப்படையாகக் கொண்ட சில வழக்கங்கள் இன்றும் இருந்து வருகின்றன. வாழை இலையில் சோறுண்பது சைவசமய ஆசாரம். இதை ஒரு மதச்சடங்கு என்று நினைத்து போர்த்துக்கீசர் தடை செய்தார்கள். சைவர்கள் அவர்களுக்குப் பயந்து சோறுண்டபின் எச்சில் இலையைக் கண்காணுத இடத்தில் போட்டுவிடுவார்கள். வாழை இலையை வீட்டுக்கூரையின் 'இறப்பில்' செருகி வைக்கும் வழக்கம் இன்னும் சில வீடுகளில் காணப்படுகிறது.

போர்த்துக்கீசர் இப்பொழுது இலங்கையில் இல்லை ஆயினும் அவர்களால் ஏற்பட்ட வழக்கம் நிலைத்திருக்கிறது. என்னத்திற்காக வாழை இலையைக் கூரையில் செருக வேண்டும் என்பதை அறியாமலேயே பலர் இந்த வழக்கத்தைப் பின்பற்றுகிருர்கள்.

அறுவடை காலத்தில் போர்த்துக்கீச அதிகாரிகள் வயல்கள் தோறும் சென்று திறை வாங்குவார்கள். அச்சமயம் தூற்றிய நெற்குவியல்மீது முனறிருல் (சுளகு) வைரவசூலத்தின் உருவம் பொறிக்கப்படும். போர்த்துக்கீசர் அதைப் போடப்படாதென்று தடைசெய்துவிட்டு அதற்குப் பதிலாக சிலுவைக் குறியைப் போடும்படி கட்டளையிட்டார்கள். இவ்வழக்கம் இன்றும் நிலவுகிறது. நெற்பொலியின்மீது சுளகினுல் புள்ளடி போடுவார்கள்.

இப்படியே இன்னும் பல வழக்கங்கள் நம் நாட்டில் நிலவுகின்றன. மக்கள் அவற்றின் காரண காரியங்களை அறியாமலேயே அவற்றைப் பின்பற்றி வருகிருர்கள்.

[ஈழத்துப் பழக்கவழக்கங்களைப்பற்றியும் அவை தோற்ற வேண்டிய காரணங்களைப்பற்றியும்வாசகநேயர்கள் எழுதி அனுப்பினுல் இப்பத்தியில் தொடர்ந்து பிரசுரிக்கலாம்.]

# பஞ்சாமிர்தம்

தயாரிப்பு:- வி. என். பி.

சொர்ணரின் வர்ணனைகள்

# போலி வேடதாசர்கள்

கலையரசு ஐயாவுக்கு தேய்ந்த தும்புக்கட்டுப்போல ஒருவெளிறிவிணுய்ப்போன மீசை இத்தனை நாட்களும் இருந்து வந்தது. அது, ஓலை வெட்டின பனையைப்போல், நறுக்கி வெட்டப்பட்டு இரு ஓரத்திலும் இரண்டு விறைப்பான முறுக்குகள் இருந்ததைக் கண்டு நான் ஆச்சரியம் மிகுந்தவனுய், 'என்னையா சங்கதி? மாப்பிள்ளைக் கோலமாயிருக்கிறதே!' என்றேன்.

'உஷ், சத்தம் போடாதை? இது வெறும் வியாபாரதந்திரம்' என்று கூறிவிட்டு சொர்ணர் மேலும் விளக்கினுர்.

'பொக்கை வாயோடை வெத்திலையை சப்பிக் கொண்டு போனவுடனே இந்த இளம்மட்டங்கள் மதிக்கிருன்களில்லை. கடைக்கோ பாங்குக்கோ போனல் பொடியள் என்னைப் பாத்திட்டு மற்றப்பக்கம் திரும்பி விடுகிருன்கள். அவைக்கு 'ஸ்டைல்' வேணும். பின்னைத்தான் இந்த மூஞ்சையைக் கொண்டு போய் 'பாபர் சலூனிலை' நீட்டினன். அவங்கள் என்னவோ சரிப்பண்ணி குடுத்திருக்கிருன்கள்', என்ருர்.

போலிவேடத்தைக்கண்டு உலகம் மயங்குவது சாதாரணமான விஷயம். மண்டைக்குள்ளும், மடிக்குள்ளும் ஒன்றுமில்லாத ஒருத்தன் டாம்பீகமாக உடுத்திக்கொண்டுபோனுல் இந்த மட உலகம் அவனை 'இந்திரன், சந்திரன்' என்று ஏற்றிப்போற்றிவர வேற்கிறது. புழுதி படிந்த உடையுடன் எளைளுக்கட்டைபோல தாடி வளர்த்துக்கொண்டு அந்த பரமசிவன் வந்தாலும் அவனை நாயென்றும் கவனிக்காது. இப்படிப்பட்ட போலிவேடதாசர்கள் தான் உலகில் பெருமளவு.

அவர்களைப்பற்றி இன்னுமொரு சிறுகதையை அவிழ்த்துவிட்டார் சொர்ணர்.

பலவருடங்களுக்கு முன்பு தாம் இளைஞுயிருந்த காலத்தில் ஒரு கோயில் திருவிழாவுக்கு சாதாரண மல்வேட்டியும் சால்வையும் தரித்துக்கொண்டு போனுராம். கோயில் முகாமையாளர்களுக்கு அவரை நன்ருகத் தெரிந்தபோதிலும் அவருடைய உடை பளபளப்பாய் இல்லாத காரணத்தினுல் அவர்கள் அவரை 'வாரும் தம்பி' என்று வரவேற்று உபசரிக்காமல் பராமுகமாய் இருந்துவிட்டார்கள்.

சொர்ணர் ஒன்றும் பேசவில்லை, வீட்டுக்குப் போய்விட்டார்.

அடுத்த நாள் திருவிழாவுக்கு அவர் தமது தந்தையாருடைய எட்டங்குல ஜரிகைக்கரை பட்டு வேஷ்டியையும் உத்தரியத்தையும் அணிந்து, கைக்கு ஓர் இரவல் கடிகாரத்தைக் கட்டி, பவுடர், சென்ட் எல்லாம் தடவிக்கொண்டு போனுர்.

அப்பாடா, அவருக்குக் கிடைத்த வரவேற்பைக் கேட்கவேண்டுமா? 'பெரியவர்கள்' எல்லோரும் அவரைச் சூழ்ந்து கொண்டு வாய்ப்பந்தல் போட்டு வரவேற்ருர்களாம்.

மற்ற நாள் திருவிழாவுக்கு அவர் பட்டு வேஷ்டி அணியவில்லை. அந்த பெரியவர்களின் மடமையைக் காண [illegible] போனுர்.

# ஆஹிரிசெய்த ஆகாரத்துரோகம்

சில ராகங்களை முறைப்படி பாடினுல் அபூர்வமான சக்திகளை உண்டுபண்ணமுடியும் என்பதற்கு பல திருஷ்டாந்தக் கதைகளுண்டு. ஆஹிரி என்ற ராகத்தைப் பாடினுல் பாடுகிறவருக்கு அன்று உணவு கிடைக்கமல் போய்விடும் என்பது ஒரு கதை.

தஞ்சாவூரிலே தாணு பாகவதர் என்று ஒரு பாடகர் இருந்தார். அவருக்கு சங்கீத'கிறுக்கு' நிறைய இருந்தது. ஒருநாள் காலையில் அவர் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்துகொண்டு ஆஹிரி ராகத்தை முணுமுணுத்துக் கொண்டிருந்தார். அச்சமயம் வேறுசில பாட்டுக்காரரும் அங்கே வந்தனர். அவர்களில் நன்னிலம் நாராயண பாகவதர் என்பவரும் ஒருவர். இவர் தாணு பாகவதரைப் பார்த்து, 'என்ன பாகவதர்வாள், காலங்காத்தா ஆஹிரி பாடிக்கொண்டிருக்கிறீர்கள்! இன்று உமக்கு அன்ன விசாரம் ஏற்படப் போகிறதே!' என்ருர்.

தாணு பாகவதருக்கு இது பிடிக்கவில்லை. தன்னை அவமானம் செய்ததாக நினைத்துக்கொண்டு, 'ஓய், எனக்கு இந்த மூட நம்பிக்கைகளில் ஒருபோதும் நம்பிக்கை கிடையாது. வாரும் இன்றைக்கு உச்சிப் பொழுது வரை ஆஹிரி ராகம் ஆலாபனை செய்து பல்லவி, நிரவல் ஸ்வரம் எல்லாம் பாடிவிட்டு வயிறு நிறைய சாப்பிட்டும் காட்டுகிறேன்' என்று சொன்னுர். மற்றவர்களும் சரி என்று ஒப்புக் கொண்டார்கள்.

தாணு பாகவதர் உடனே மனைவியிடம் கட்டுச்சாதம் வாங்கிக்கொண்டு மற்ற பாகவதர்களையும் அழைத்துக்கொண்டு ஆற்றங்கரைக்கு போனுர். அங்கே ஒரு மூங்கில் மர நிழலில் உட்கார்ந்து அருகில் தொங்கியிருந்த மூங்கில் கிளை ஒன்றில் கட்டுச் சாதத்தைக் கட்டிவிட்டு (தரையில் வைத்தால் எறும்பு மொய்த்து விடும் என்பதற்காக) சாவகாசமாக ஆஹிரி ராகத்தை ஆலாபனை செய்ய ஆரம்பித்தார்.

இரண்டுமணி நேரத்துக்கு மேல் ராக ஆலாபனை நடந்தது.

மற்றவர்கள்பொறுமையாக கேட்டுக் கொண்டிருந்தார்கள். தாணு பாகவதர் பல்லவி பாட ஆரம்பித்தபோது மணி பத்தரை, பதினென்று ஆகி விட்டது. மற்றபாகவதர்களின் வயிறு கிண்ட ஆரம்பித்துவிட்டது. தாணு பாகவதர் எட்டுக்கலை சௌக்கத்தில் திரிகாலத்திலும் பல்லவி பாடி, பின் நிரவல் செய்து மனேதர்மஸ்வரம் பாடி முடிப்பதற்குவெகு நேரமாகப்போகிறதேஎன்று யோசித்து தாங்கள் முதலில் வயிற்றுப்பசியை தீர்த்துக் கொண்டுவந்து மிச்சத்தைக் கேட்கலாமென்று தீர்மானித்து தத்தம் வீடுகளுக்கு சென்றனர்.

அவர்கள் சாப்பிட்டுவிட்டு திரும்பி வந்து பார்த்தபோது தாணுபாகவதர்மூங்கில் மரத்துக்குக்கீழேநின்று ஆகாயத்தை நோக்கி தொங்கித் தொங்கிக் கொண்டிருந்தார். அவர்கள் மிகவும் ஆச்சரியம் அடைந்து கிட்ட நெருங்கிப் பார்த்தபோது, பாகவதர் தொங்கிப் பாய்வது தமது கட்டுச்சாதத்தை எட்டிப் பிடிக்கவே என்று புரிந்து கொண்டார்கள்.

காலையில் பனி நீர் பட்டு இள மூங்கில் வளைந்து தாழ்ந்திருந்தது வெய்யில் ஏற ஏற

(3-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

அது கொஞ்சம்கொஞ்சமாக பாரம்குறைந்து மேலே எழும்பிவிட்டது. பாட்டுப் பிராககிலிருந்த தாணு பாகவதர் அதைக் கவனிக்கவில்லை. பல்லவி, ஸ்வரம் எல்லாம் பாடிவிட்டுத்திரும்பிப்பார்த்தபோது தான் அவருக்கு சங்கதி புலப்பட்டது. ஆஹிரி ராகம் உண்மையாகவே தமக்கு ஆகாரநஷ்டம்செய்து விட்டதென்பதை அப்பொழுதுதான் உணர்ந்தார்.

வந்தவர்களுக்கு மகிழ்ச்சி ஒரு புறம். சிரிப்பு ஒருபுறம் பாகவதரின் பசி அவஸ்தையைக்கண்டு பரிதாபம் ஒரு புறம், தாணு பாகவதர் அவர்களைக்கண்டு வெட்கித் தலைகுனிந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று தினங்களாகியும்

# மீனவர்கள் நால்வர் கரைவந்து சேரவில்லை!

யாழ்ப்பாணம், செவ். கரையூரிலிருந்து காங்கேசன்துறையை நோக்கி ஆழ்கடலில் மீன்பிடிக்கச் சென்றிருந்த மீனவர்கள் நால்வரை கடந்த மூன்று நாட்களாக கரை வந்து சேரவில்லை. இவர்கள் யந்திரப் படகிலேயே சென்றிருந்தனர்.

கரையூரைச் சேர்ந்தவர்களான கஸ்பர் றிச்சர்ட், சூசைப்பிள்ளை சின்னத்தம்பி, அந்தோனிப்பிள்ளை கிங்ஸ்லி, எஸ், ஜோசெப் ஆகியோரே மீன்பிடிக்கச் சென்றவர்களாவர்.

கடற்படையினர், விமானப் படையினருக்கு பொலிஸார் இதுசம்பந்தமாக அறிவித்தல் கொடுத்துள்ளனர். நதி

# இரு நிமிட நேரத்துக்குள் விதி மாறிவிட்டது

## தூக்குக்கயிற்றில் தொங்கவேண்டியவர் பிழைத்தார்!

கொழும்பு, திங்கள்

தூக்குக் கயிற்றில் தொங்க இருநிமிடங்கள் தான் இருந்தன! அந்த நபரின் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது! ஆனால் அந்தக் குறுகிய இடைவெளிக்குள் வந்த ஒரு அறிவித்தல் அவரின் உயிரைக் காப்பாற்றிவிட்டது!

இன்றுகாலை சரியாக எட்டு மணிக்கு டபிள்யூ. பொடிகாமி என்பவர் வெலிக்கடைச் சிறைச்சாலையிலுள்ள தூக்குமேடையில் மரண தண்டனையை அனுபவிக்கவேண்டியிருந்தும் காலை மணி ஏழுஐம்பத்தெட்டுக்கு. கவர்னர் ஜெனரலிடமிருந்து வந்த ஒரு உத்தரவினால் அவர் மரணத்திலிருந்து மீட்கப்பட்டார்!

மூன்று வருடங்களுக்கு முன்னால் மங்களவியாவைச் சேர்ந்த விமலாவதி என்றபெண் கொலை வழக்கில் பொடிஅப்புகாமி குற்றவாளியாகக்கண்டு அவருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது!

தூக்குத்தண்டனை நிறைவேற்றப்பட வேண்டிய நேரத்துக்கு பத்து நிமிடங்கள் முன்பாக ராணி மாளிகையிலிருந்து வந்த ஒரு செய்தி தூக்குத்தண்டனையை நிறுத்தும்படி உத்தரவிட்டது! ஆனால் வந்த அந்த உத்தரவு சரியானதுதானா என்பதுபற்றி ஊர்ஜிதப்படுத்திக்கொண்டபோது மரணதண்டனையை நிறைவேற்றிக்கொள்வதற்கு இரண்டு நிமிடங்களே இருந்தன!

சிறைச்சாலை டாக்டர்கள், அதிகாரிகள் மரணதண்டனையை நிறைவேற்றுவதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்து முடித்துவிட்டனர். அந்தச்சமயத்தில் 'நிறுத்து, நிறுத்து' என்று உயர் அதிகாரி ஒருவர் சப்தமிட்டுக்கொண்டே அங்குவந்து நின்றார்!

முப்பத்தொன்பது வயதான பொடி அப்புகாமி ஒரு ஆசிரியராக இருந்தவர். இவர்மீது சாட்டப்பட்டிருந்த குற்றச்சாட்டு சில வாரங்களுக்குமுன்தான் நிரூபிக்கப்பட்டு, மரண தண்டனை வழங்கப்பட்டது.

இவரால் கொலைசெய்யப்பட்டதாகக் கூறப்படும் விமலாவதி என்ற இளம் பெண்ணின் சடலம் கோரமானமுறையில் சிதைவுபட்டநிலையில் மங்களஎலியா ஆற்றில் கண்டெடுக்கப்பட்டிருந்தது.

கோதபயர் கொலை வழக்கு

# தந்தை விசாரிக்கப்பட்டார்

கொழும்பு, திங்கள்

தெஹிவளையில் கோதபயா என்ற சிறுவன் கொலையுண்டது சம்பந்தமாக இன்று அப்பையனின் தந்தையான கிரம்பகந்த என்பவரை இரகசியப் பொலிஸார் விசாரணை செய்தனர். அவரது வீட்டிலிருந்து சில தஸ்தாவேஜிகளையும் பொலிஸார் கைப்பற்றினர்.

கிரம்பகந்த ஒரு வர்த்தகர் எனவும் முன்னர் சிலகாலம் தெஹிவளை மிருகக் காட்சிசாலைக்கு மீன் விநியோகித்து வந்தாரென்றும் தெஹிவளை கல்கிசை மாநகர சபைத் தேர்தலில் முன்னர் போட்டியிட்டாரென்றும் அறியப்பட்டுள்ளது.

இந்த வழக்கில், முதலாவது எதிரியான போலின் குறூஸ் (19) என்பவர் மீது இம்மாதம் 30-ம் திகதி வழக்கு தாக்கல் செய்யப்பட விருக்கிறது.

கிரம்பகந்த வின் மீதும் அன்றைய தினமே வழக்கு தாக்கல் செய்யப்பட இருப்பதாகத் தெரிகிறது.

முக்கிய சாட்சி ஒருவர் மீது வழக்கு சோடித்ததாகச் சந்தேகப்படும் இரு பொலிஸ் அதிகாரிகள் மீதும் மூன்று பொலிஸ் கான்ஸ்டபிள்கள் மீதும் இம்மாதம் 29-ம் திகதி வழக்கு தாக்கல் செய்யப்பட விருக்கிறது. இவர்கள் தற்போது விளக்கறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## வழக்குத் தள்ளுபடி

யாழ்ப்பாணம், திங்கள்

இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலையில் மலசலகூடம் கட்டுவதற்காக சிரமதான இயக்கத்தொண்டர்களால் அகற்றப்பட்டவேலி தமக்குச்சொந்தமான வேலியென்றும் அதனை சிரமதான இயக்கத்தினர் வெட்டியதாகவும் திருவாளர்கள்: நா. பொன்னுத்துரை, வ. தில்லையன், சு. முருகையா, சி அம்பிகைபாகன், ஐ. சந்திரராசா, ஐ. துரைராசா, வி. தெய்வேந்திரம், பெ. பஞ்சலிங்கம் ஆகியோர்மீதுதொடர்ந்திருந்த வழக்கு இன்று மல்லாகம் கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது மேற்கூறியவர்கள் குற்றவாளிகள் அல்ல எனத் தெரிவித்து மல்லாகம் நீதிபதி திரு. அத்துறுபானு வழக்கைத் தள்ளுபடி செய்தார்.

## தமிழ்நாடு கவர்னர்

சென்னை, ஜூன் 27

தமிழ்நாடு தற்காலிக கவர்னராக நியமிக்கப்பட்டுள்ள திரு. உஜல் சிங் நாளை பதவியேற்பார்.

# மகாநாயகதேரோ - நாகநாதன் சந்திப்பு

# ஐக்கியத்துக்கு ஒத்துழைக்க ஆவல்

## தமிழ் பல்கலைக்கழகம் ஆராயப்பட்டது

கொழும்பு, திங்கள்

தமிழ் பேசும் மக்களுக்கும் சிங்கள மக்களுக்குமிடையேயுள்ள நல்லுறவும்நல்லெண்ணமும் மேலும் வலுவடையவேண்டுமென மல்வத்தை மடாதிபதி மகாநாயக தேரோவை அவரது வாஸஸ்தலத்தில் சந்தித்த தமிழரசுக்கட்சித்தலைவர் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் தெரிவித்தார். இதற்கான பூரண ஒத்துழைப்பையும் தாம் தருவதாகவும் டாக்டர் நாகநாதன்எடுத்துக்கூறினார்.

டாக்டர் நாகநாதன் இதனை ஒரு விசேஷ நல்லெண்ண செய்தியாக மகாநாயக தேரோவிடம் தெரிவித்தார்.

தமிழரசுக்கட்சியின் மகாநாட்டில் விவரிக்கபட்ட விஷயங்கள் குறித்து மகாநாயகதேரோவிடம் திரு. நாகநாதன் எடுத்துக்கூறினார்.

### தமிழ் பல்கலைக்கழகம்


தமிழ், இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ கலாசாரங்களை உள்ளடக்கிய தமிழ் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவுவதற்கு மகாசங்கத்தின் ஆதரவைத் தருமாறு டாக்டர் நாகநாதன் கேட்டுக்கொண்டார்.

டாக்டர் நாகநாதன் சொன்ன கருத்துக்களை ஆர்வத்தோடு கேட்டு அவற்றை ஏற்றுக்கொண்ட மகாநாயக தேரோ தாம் தமிழ் பல்கலைக்கழகம் அமைக்கும் விஷயமாக பிரதமர் திரு. டட்லி சேனநாயகா, ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன ஆகியோருக்கு ஏற்கனவே எடுத்துக்கூறியுள்ளதாகவும் ராஜாங்கமந்திரி திரு. ஜெயவர்த்தன யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து தமிழ் பல்கலைக்கழகம் அமைப்பதற்கான சூழ்நிலையை அறிந்து வரவேண்டுமென தாம் விரும்புவதாகவும் கூறினார்.

தாம் சயாம் சென்று திரும்பியதும் தமிழரசுக் கட்சியின் பல்கலைக்கழகக் கோரிக்கை பற்றி பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்தப்போவதாக மகாநாயக தேரோ டாக்டர் நாகநாதனுக்கு உறுதிதெரிவித்தார்.

வெம்பிள்டன், ஜூன் 27

கடந்த இரு வருடங்களாக டென்னிஸ் சாம்பியனாக இருந்த வீரர் எமர்ஸன் இம்முறை இங்கு நடைபெற்ற போட்டியில் ஆஸ்திரேலிய வீரர் ஒருவரால் தோற்கடிக்கப் பட்டார்.

எவ்வாறு

# சன்லைட்




மேலும் பிரகாசமாகச் சலவை செய்கிறது பாருங்கள்

வேறெந்த சோப்பும் நிகர் நிற்க முடியாத பிரகாசம்

அதற்குக் காரணம், சன்லைட்டில், உங்கள் ஆடைகளை, மேலும் பிரகாசமாக—சலவைக்குச் சலவை பிரகாசமாக—தோன்றச் செய்யும் ஒரு விசேஷ பொருள் சேர்ந்திருப்பதே. சன்லைட்டின் செழுமையான நீடித்த நுரை, முழு அழுக்கையும், விரைவாகவும், இலகுவாகவும் அகற்றுகிறது; அதே வேளையில் அது மென்மையானது, இதமானது. ஒரே ஒரு கட்டி சன்லைட், பலரகமான 50-60 ஆடைகளைக் கழுவுகிறது—ஒரு ஆடைக்குச் செலவு ஒரு சதத்திலும் குறைவு.

மேலும் மேலும் தாய்மார்கள், தங்கள் வீட்டில்—சேலைகள், சேர்ட்டுகள், காற்சட்டைகள், பாவாடைகள், துவாய்கள், படுக்கை விரிப்புகள் போன்ற சகல ஆடையணிகளையும் சலவை செய்ய, சன்லைட் உபயோகிப்பதில் ஆச்சரியமில்லை. தங்கள் சலவை வேலைகளுக்கு சன்லைட்டே சிறந்ததென்பது அவர்களுக்குத் தெரியும்—மிகச் சிறந்ததே அவர்களுக்கு மிகத் தகுந்தது. தங்கள் குடும்பத்தினர். மேலும் பிரகாசமான மேலும் கவர்ச்சியான உடையணிந்து தினமும் காட்சியளிப்பதைக் காண, அவர்கள் விரும்புகிறார்கள். சன்லைட்டை அவர்கள் உபயோகிப்பதற்கும், நீங்கள் உபயோகிக்க வேண்டியதற்கும் காரணம். இதுதான் —[illegible]ல், அது மேலும் பிரகாசமாகச் சலவை செய்கிறது.

ஒரு லீவர் உற்பத்தி

JWT/S/1X54


இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் [illegible]தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி [illegible] நிலத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஜூன் மாதம் 29-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org